# global express®

*we strive for your success!*




புதிய பரிணாமம்... புதிய இசை... இதயத்தின் நாதம்...

June
2011
Volume 01
Issue 04

Free Issue

மாங்கல்யம்
சிறப்பிதழ்

SriLanka
Colombo - Jaffna - Mannar - Vavuniya - Batticaloa - Trincomalee

Overseas
Australia - Canada - France - Germany - India - Singapore - Swiss - UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photography by - Rabeshen, Dressed by: Brintha.


Rabeshen's Studio
# Chhaya
we lead others follow

**High Quality HD Technology**
**1st Time in**
**Tamil Videography**
**Introducing . . .**

e-mail: rabeshen@gmail.com
web: www.studiochhaya.com

+(94) 11 2594492.
No. 40, 1/1, Galle Road,
Wellawatte,
Colombo 06.

# Brintha
Herbal Beauty Care Centre

www.brintha.com

Office: 2599905,2553028,
Mob : +94 776 331257

No. 62/16, Galle Road,
(Opposite Bank of Ceylon)
Wellawatte,
Colombo 06.

Saree's by
JEYECHANDRANS
The Art of Fashion



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# CONTENTS


| | |
|---|---|
| | Gold Ad |
| 01 | Contants |
| 02 | Maangalyam Articles |
| 09 | Wedding Remembrances |
| 10 | Maangalyam Ads |
| 14 | Spiritual |
| 15 | Tours Sri Lanka |
| 16 | Maangalyam Ads |
| 19 | Historical Remembrances |
| 20 | My Dream Vehicle |
| 21 | Monthly Specials |
| 22 | Youth Achievements |
| 23 | Jasmine Ads |
| 29 | Bharatham |
| 30 | Swami Vivekanandar |
| 31 | Fashion |
| 32 | Peaks |
| 34 | Rose ads |
| 39 | Mothers Day |
| 40 | Foods Recipe |
| 41 | Jokes |
| 42 | Special Interview |
| 43 | Special Article |
| 44 | Orchid ads |
| 46 | Vettri FM |
| 47 | Coupon |
| 48 | Important Numbers |
| 49 | Gift Page |
| 50 | XPress Cinema |
| 51 | Children Section |
| 52 | Numerology |
| 53 | Lilly ads |
| 55 | Medical Advice |
| 57 | Sports |
| 58 | Global Page |
| 59 | Global Page |
| 60 | Saibaba Article |
| | Platinum Ad |
| | Diamond Ad |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாங்கல்யம்



இந்து சமய சம்பிரதாய முறைகளை ஆராயும் வேளையில் தாலி கட்டும் முறை அவசியமா ? என்ற கேள்வி எழும்போது நிச்சயம் அது இந்துக்களுக்கு ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்றே கூறவேண்டும். பொதுவாகவே காலம் காலமாக தொடர்ந்து வரும் பழக்க வழக்கங்களை எந்தவித காரணமுமின்றி நாம் மாற்றி அமைக்க முற்படக் கூடாது. அப்படி மாற்றி அமைக்க முற்படும் போது பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அதனால் சம்பிரதாயங்களை நாம் ஏற்றுக்கொண்டு நடக்கும் பொழுது அங்கு பிரச்சினைகள் தோன்றாது.

இந்து மதத்தினர் அதில் உள்ள ஒவ்வொரு கருத்துக்குப் பின்னும் நிச்சயம் ஏதோ ஒரு காரணம் உள்ளது என்பதை நம்புகிறவர்கள். அதன் அர்த்தத்தை புரிந்து கொண்டு வாழ்வில் நடைமுறைப் படுத்தும் உண்மையானவர்களுக்கு இந்த சம்பிரதாயங்களில் எது சுவையானது, எது அர்த்தமற்றது என்பதைப் பிரித்தறிய முடியும். நாம் இறைவனுக்கு உணவு படைப்பதற்குப் பதில் ஏதாவது பசியில் வாடும் ஏழை ஒருவனுக்குச் சாப்பிட உணவு இடுவது மேல் என்று நம்புகிறவர்களால் மட்டுமே சில விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

நாகரிகமில்லாமல் சுற்றிக்கொண்டு இருந்த மனிதனை ஒரு நாகரிக கூண்டுக்குள் கொண்டு வரவே இந்த அகண்ட அண்டத்தையும் அதனுள் கோடிக்கணக்கான உயிர்களையும் படைத்த இயற்கைக்கு மனிதன் வைத்த பெயர்தான் இறைவனாகும். உலகம் முழுவதையும் கட்டியாள்வது ஒரே இயற்கைதானே ஒழிய தொகுதி வாரியாக மக்களைப் பிரித்து வைத்து இந்து மதத்திற்கு ஒரு கடவுளும், நம் கூடவே வாழ்கின்ற முஸ்லிம் சமூகத்திற்கு அல்லது கிறிஸ்தவ சமூகத்திற்கு ஒரு கடவுளும் என்ற நியதியில் பார்க்காமல் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றரீதியில் வாழும் பொழுது வாழ்வு சிறக்கும்.

தாலி என்ற விஷயத்திற்கு வருவோமானால் அது எப்படி வந்தது என்பதை பல நூல்களை ஆராய்ந்த போது கிடைத்த தகவலை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தில் வாலிபர்களில் சிலர் பருவப் பெண்களுடன் கூடிவிட்டு பின்னர் அவளோடு வாழாமல் அவளுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பொய் கூறித் தப்பித்துக் கொண்டனர். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தங்களிருவரிடையே உள்ள தொடர்பை நிரூபிக்க முறையான சான்றுகள் இல்லாததால் அவள் சொல் பயனற்றுப் போனது. இந்நிலையை மாற்ற சான்றோர்களால் ஏற்படுத்தப்பட்டதுதான் திருமணம். நீ இவளுடன் தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்படுத்தி எல்லோார் முன்பும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதனால் பெண்ணும் சமூகமும் பாதுகாக்கப்பட்டது. ஒரு ஆண் ஒரு பெண்ணை தன் உயிர் மூச்சு உள்ளவரை பிரியாமல் காப்பேன் என்று பனை ஓலையில் உறுதிமொழி எழுதிக் கையொப்பம் இடுவான். பின்னர் இப்பனையோலை சுருட்டப்பட்டு ஓர் உலோகக் குழாயில் இடப்பட்டு அதனைக் கயிற்றால் கட்டி அந்தக் கயிற்றை மணமகன் மணமகளுடைய கழுத்தில் கட்டுவான். இதுவே தாலியாக மாறியது. (தாலம் என்ற சொல்லுக்குப் பனை ஓலை என்று பொருள். தாலத்தால் கட்டப்படுவது தாலி எனக் கூறப்பட்டது).



நெறியற்று வாழும் மனிதர்களை அவர்களது கெட்ட எண்ணங்களே கெடுத்துவிடும் என்பதை உணர்த்த மனிதர்கள் இறைவனை மையமாகக் கொண்டுபல நல்ல கருத்துக்களை விதைத்தார்கள். காலத்திற்கேற்ப பனை ஓலைக்குப் பதில் மஞ்சளைக் கொண்டும், பின்னர் தங்கத்தைக் கொண்டும் தாலி கட்டும் முறையை ஏற்படுத்தினார்கள்.

அத்தாலி பெண்ணுக்கு மட்டுமல்லாமல் ஆணுக்கும் ஒரு கட்டுப்பாட்டை விதித்தது. முன்பு வெளி ஊர்களுக்கு வேலைக்குச் செல்லும் கணவன்மார் ஊர் திரும்பும் வரை தன் மனைவி முறை தவறி நடக்கக் கூடாது என்றும் பெண்ணின் மார்புவரை தாலியைத் தொங்க விடுவது கணவனை நினைவு படுத்துவதற்காக என்றும்தான் தாலி கட்டும் முறை கொண்டு வரப்பட்டதாக சொல்லப்படுகிறது. தாலி என்பது சமுதாயத்திற்காக மட்டுமல்ல எல்லோருக்கும் இந்தக் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்று பெரியவர்களால் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே ஒருவன் ஒருத்திக்குத் தாலிகட்டி உண்மையான அன்புடனும் நன்றாக ஒருவரை ஒருவர் புரிந்தும் வாழ்வதே நல்ல வாழ்க்கையாக அமையும். தாலி பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் வேலியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது வாழ்வில் இணைந்துள்ள உங்களுடன்
நீங்கள் தடம் பதிக்கும் இடமெல்லாம்
உறுதியுடன் நாமிருப்போம்...

glaze GALLERY
FOR THE LUXURIOUS BATHSUITES

















Wall Tiles, Floor Tiles, Porcelain Tile, Homogenous TilesBath Suites, Faucets, Shower Panels, Mirrors, Geyzers,Bath Accessories, Out Door Tiles, Bath Tubs, Shower Cubicles, Tile Beading, Tile Installation Materials, Kitchen Sinks, Granites & Vanity Tops.

நவீன் செரமிக் (பிரைவேட்) லிமிட்டட்
...truly international

# 307, ஜோர்ஜ் ஆர்.டி சில்வா மாவத்தை, கொழும்பு - 13. தொலைபேசி: 2345197
# 305, ஜோர்ஜ் ஆர்.டி சில்வா மாவத்தை, கொழும்பு - 13. தொலைபேசி: 5851539
# 507, பிரின்ஸ் ஓப் வேல்ஸ் அவனியூ, கொழும்பு-14. தொலைபேசி: 5855995
# 104, நாவல வீதி, நுகெகொடை. தொலைபேசி: 5535530
# 555/3, புதிய கண்டி வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்ல. தொலைபேசி: 2741238

எமது புதிய கிளைகள்
# யாழ்ப்பாணம் # வவுனியா # மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mb Chennai

**Pure Vegetarian Food**

No-14, Rudra Mawatha,
Wellawatta.
Tel: 011 2 364 505,
Hotline: 0777 006 777

Mb

Marrybrown

**Family Resturant**

No-32, Kinross Avenue,
Colombo-04
Tel: 011 2 559 185

Mb

Yaal Restaurant

**Authentic Jaffna Food**

No-56, Vaverest Place,
Marine Drive, Colombo-06.
Hotline: 0772 222 022

Olive's Kitchen & Grill

**Chinese and Thai Food**

No-25, Station Avenue,
(Marine Drive), Colombo-06.
Tel: 011 2 504 937,
011 2 504 929

CHINA TOWN

**Chinese, Japanese, Thai and Western Cuisine**

No-38, Sea Avenue,
Colombo-03.
Hotline: 0777 236 236

INDIAN SPICE

**AUTHENTIC INDIAN RESTAURANT**

**Authentic Moghul Food**

No-29/1, Milagiriya Avenue,
(Marine Drive), Colombo-04.
Tel: 011 2 500 886 / 895

Miami MIAMI Reception hall

**FESTIVALS, ALL OCCASIONS AND ALSO DAILY ORDERS ACCEPTED**

33, Alexandra Road, (Marine Drive) Wellawatte, Colombo-06.
Tel: +94 2 504 362/3 Hotline: +94 777 366 248

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் அன்று









# திருமணம்



ஒரு சமூக, சட்ட, உறவுமுறை அமைப்பு ஆகும். குடும்பம், பாலுறவு, இனப்பெருக்கம், பொருளாதாரம் போன்ற பல காரணங்களுக்காக திருமணம் செய்யப்படுகிறது. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மனிதர்களுக்கு இடையே திருமணம் நடைபெறுகிறது. திருமணம் என்பது மனித இனத்தைப் பொறுத்தவரை ஒரு உலகளாவிய பொதுமையாக இருந்த போதிலும், வெவ்வேறு பண்பாட்டுக் குழுக்களிடையே திருமணம் தொடர்பில் வெவ்வேறு விதமான விதிகளும், நெறிமுறைகளும் காணப்படுகின்றன.

திருமணங்கள் பல வகைப்படுகின்றன. பெரும்பான்மைத் திருமணங்கள் ஒர் ஆண், ஒரு பெண் ஆகிய இருவருக்கிடையே நடைபெறும் ஏற்பாடு ஆகும். எனினும் தற்காலத்தில் ஆணுக்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும் பெண்ணுக்கு இடையே நடைபெறும் திருமணங்களும் சட்ட, அரசியல் முறையில் பல நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவை ஒருபால் திருமணங்கள் எனப்படுகின்றன.

ஆண் அல்லது பெண் ஒரே சமயத்தில் எத்தனை மனைவியரை அல்லது கணவன்மாரைக் கொண்டிருக்கலாம் என்பதிலும், ஒருவர் யாரைக் கணவனாக அல்லது மனைவியாக அடைய முடியும் என்பதிலும் பல வேறுபாடுகள் உள்ளன. மேலோட்டமாகத் துணைவர் எண்ணிக்கை அடிப்படையில் திருமணத்தை பின்வரும் வகைகளாகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| ஒருதுணை மணம் | (monogamy) |
| பலதுணை மணம் | (polygamy) |
| பலமனைவி மணம் | (polygyny) |
| பலகணவர் மணம் | (polyandry) |
| குழு மணம் | (group marriage) |

திருமணம் இன்று











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

priyaashankers

enhancing your beauty

Ladies only Salon



The perfect look for the

**prefect day.**

**Head office**
33/15,Jinananda Mawatha, Kotahena,
Colombo 13. T: +94 11 243 0304

**Academy Branch**
25A,Wasala Road, Kotahena,
Colombo 13. T: +94 77 315 8774

**Salon/Academy**
38C, Collingwood Place, Wellawatte,
Colombo 6. T: +94 77 107 6026

City & Guilds

**Contact numbers for Bridal purposes 077 107 6023, for Salon services 077 315 8774, 077 107 6026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம்



## துளசியின் மகிமைகள்

விஷ்னு பகவானுக்குப் பிரியமானது துளசி. இத் துளசியின் இலை, பூ, வேர், நிழல் என்பனவெல்லாம் ஆன்மீக மகத்துவம் மிக்கவை என்பதுடன் ஆரோக்கிய வாழ்விற்கும் வழிகாட்டி நிற்பவை. அதி குளிர்ச்சியில் இருக்கும் மகா விஷ்ணுவிற்கு வெப்பத்தைத் தரும் துளசி மிகவும் உகந்த ஒரு பூசைப்பொருளாக விளங்குகிறது.

துளசி மஞ்சரியை பகவானுக்கு அளிப்பவர் மற்ற எல்லாப் புஸ்பங்களையும் அளித்த பலனைப் பெறுவார் என்றும், துளசி உள்ள காடுகள், வீடுகள் ஆகிய இடங்களில் பகவான் ஆனந்தமாக வசிக்கின்றார் என்றும், துளசி உள்ள வீடுகள் எந்தக் காலத்திலும் வீழ்ச்சி அடையாது என்றும், துளசியின் மண் உள்ள இடங்களில் எல்லாம் பகவானும், மற்ற எல்லாத்தெய்வங்களும் வீற்றிருப்பார்கள் என்றும், துளசியின் மண்ணை எடுத்து உடலில் பூசிக்கொண்டு பகவானை வணங்குபவர் ஒவ்வொருநாளும் நூறு நாள் பூசை செய்த பயனை அடைவார்கள் என்றும், துளசியை பார்த்தாலோ அல்லது அச்செடி இருக்கும் வீட்டிற்கோ, தோட்டத்திற்கோ சென்றாலோ ஒருவன் ஒரு பிராமணனைக் கொன்ற பாவத்திலிருந்து கூட விடுபட முடியும் என்றும், துளசியின் வாசனையை முகர்ந்து பார்க்கும் எவரையும் அது தூய்மையடையச் செய்யும் என்றும், பக்தியுடன் துளசி இலையை பகவானுக்கு அளிப்பவர்கள் அவர் அருகிலேயே வாழ்வார்கள் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. துளசி இல்லாமல் பகவான் பூவோ, உணவோ அல்லது சந்தனத் தைலத்தையோ ஏற்பதில்லை. துளசித் தீர்த்தம் கங்கை நீருக்கு ஒப்பானது.

துளசியைக் இலையைக் கொண்டு ஹோமம் செய்தால் நீண்ட நெடுங்காலமாக விவாகம் ஆகாதவர்களுக்கும் விவாகம் நடைபெறும். எண்ணிய கருமங்கள் யாவும் இனிதே நிறைவுறும். துளசியின் மகத்துவத்தை நன்கு உணர்ந்து அதனைப் பேணி, தூய்மை காத்து, பறிக்கத்தகாத காலங்களில் பறிக்காது விடுத்தும், பறிக்கத்தகுந்த காலங்களில் அதை பக்தி சிரத்தையுடன் துளசியிடம் அனுமதி பெற்று மந்திர உச்சாடனம் செய்த வண்ணம் பறித்தெடுத்தும் பயனுறு விதத்தில் பயன் படுத்தி இம்மை மறுமைப் பயன் இரண்டினையும் இலகுவில் பெறுவோமாக.

தொகுப்பாக்கம் : திருமதி. மனோகரி ஜெகதீஸ்வரன், தெகிவளை.

## யாரை வழிபட வேண்டும்.

- அறிவும், வீரியமும், அழகும் பெற முருகப் பெருமானை வணங்கலாம்
- ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள ஆஞ்சநேயரை வழிபடலாம்
- குடும்ப செழிப்பைப் பெற திருமகளை வணங்கி வரலாம்

## அர்ச்சனையும் மலர்களும்

* விநாயகரை துளசியால் அர்ச்சனை செய்யக் கூடாது. (விநாயகர் சதுர்த்தியன்று மட்டும் ஒரு தளம் போடலாம்.)

* பரமசிவனுக்குத் தாழம்பூ உதவாது. தும்பை, வில்வம், கொன்றை முதலியன விசேஷம். ஊமத்தை, வெள்ளெருக்கு ஆகியவற்றாலும் அர்ச்சிக்கலாம்.

* விஷ்ணுவை அக்ஷதையால் அர்ச்சிக்கக் கூடாது.

* பவளமல்லியால் சரஸ்வதியை அர்ச்சனை செய்யக் கூடாது.

* விஷ்ணு சம்பந்தமான தெய்வங்களுக்கு மட்டுமே துளசி தளத்தால் அர்ச்சனை செய்யலாம். அதுபோல, சிவசம்பந்தமுடைய தெய்வங்களுக்கே வில்வார்ச்சனை செய்யலாம்.

* சாமந்திப்பூவைக் கண்டிப்பாக உபயோகப்படுத்தக் கூடாது.

* மலரை முழுவதுமாக அர்ச்சனை செய்ய வேண்டும். இதழ் இதழாகக் கிள்ளி அர்ச்சனை செய்யலாகாது.

* வாடிப்போன, அழுகிப்போன, பூச்சிகள் கடித்த மலர்களை உபயோகிக்கக் கூடாது.

* அன்று மலர்ந்த மலர்களை அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும்.

* ஒரு முறை இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட மலர்களை எடுத்து, மீண்டும் அர்ச்சனை செய்யக் கூடாது. வில்வம், துளசி ஆகியவற்றை மட்டுமே மறுபடி உபயோகிக்கலாம்.

* தாமரை, நீலோற்பலம் போன்ற நீரில் தோன்றும் மலர்களை தடாகத்திலிருந்து எடுத்த அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும் என்கிற விதியில்லை.

* வாசனை இல்லாதது, முடி, புழு ஆகியவற்றோடு சேர்ந்திருந்தது, வாடியது, தகாதவர்களால் தொடப்பட்டது, நுகரப்பட்டது, ஈரத்துணி உடுத்திக் கொண்டு வரப்பட்டது, காய்ந்தது, பழையது, தரையில் விழுந்தது ஆகிய மலர்களை அர்ச்சனைக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

* சம்பக மொட்டுத் தவிர, வேறு மலர்களின் மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.

*மலர்களைக் கிள்ளி பூஜிக்கக் கூடாது. வில்வம், துளசியைத் தளமாகவே அர்ச்சிக்க வேண்டும்.

* முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விளா-இவை பஞ்ச வில்வம் எனப்படும். இவை சிவபூஜைக்கு உரியவை.

* துளசி, முகிழ்(மகிழம்), சண்பகம், தாமரை, வில்வம், செங்கழுநீர், மருக்கொழுந்து, மருதாணி, தர்பம், அருகு, நாயுருவி, விஷ்ணுக்ராந்தி, நெல்லி ஆகியவற்றின் இலை பூஜைக்கு உகந்தவை.

* பூஜைக்குரிய பழங்கள் நாகப்பழம், மாதுளை, எலுமிச்சை, புளியம்பழம், கொய்யா, வாழை, நெல்லி, இலந்தை, மாம்பழம், பலாப்பழம்.

* அபிஷேகம், ஆடை அணிவிப்பது, சந்தன அலங்காரம், நைவேத்தியம் முதலிய முக்கிய வழிபாட்டுக் காலங்களில் கட்டாயமாகத் திரை போட வேண்டும். திரை போட்டிருக்கும் காலத்தில் இறை உருவைக் காணலாகாது.

* குடுமியுள்ள தேங்காயைச் சமமாக உடைத்துக் குடுமியை நீக்கி விட்டு நிவேதனம் செய்ய வேண்டும்.

* பெரு விரலும் மோதிர விரலும் சேர்த்துத் திருநீறு அளிக்க வேண்டும். மற்ற விரல்களைச் சேர்க்கக் கூடாது.

* கோவில்களில், பூசகர்களிடமிருந்துதான் திருநீறு போன்ற பிரசாதங்களைப் பெற வேண்டும். தானாக எடுத்துக் கொள்ளக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கமே என்றாலும் அது நம் ஊர் போல் வருமா?



இலங்கை நாடானது சுற்றுலாத்துறைக்குச் சிறந்த ஓர் இடமாகவும் உல்லாசப் பயணிகள் விரும்பி வரும் நாடாகவும் உள்ளது. கடந்த காலங்களில் நிலவிய போர்ச் சூழலிலும் யுத்தம் இடம் பெறாத ஏனைய இடங்களுக்கு வந்து போவதை உல்லாசப்பயணிகள் விரும்பியிருந்ததை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்தோம். எனினும் உல்லாசப் பயணிகள் அதிகம் விரும்பும் கரையோரப்பிரதேசங்களில் அவர்களுக்கு ஏற்ற சூழல் இருக்கின்றதா?

நிச்சயம் உண்டு. இலங்கையை உலகிலுள்ள பாதுகாப்பான மற்றும் பிரபல்யமிக்க சுற்றுலா கேந்திரஸ்தலமாக டைம்ஸ் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை மற்றும் சுனாமி அனர்த்தத்தினாலும் பின்னடைவைச் சந்தித்திருந்த இலங்கையின் சுற்றுலாத் துறையானது தற்போது படிப்படியாக வளர்ச்சி கண்டு வருகின்றமைக்கு இது நல்லதொரு சான்று.

இலங்கையின் தென் பகுதியிலுள்ள சுற்றுலாத்தளங்களாக மாத்தறை, ஹிக்கடுவை, மிரிச, அம்பாந்தோட்டை பெரிதும் பிரபல்யம் பெற்றவை. இயற்கையின் வனப்பு கொட்டிக்கிடக்கும் இந்த இடங்களின் அழகை ரசிப்பதற்காக வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றதாக இங்கு சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்டிருப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் சுற்றுலாச்சபையால் அனுமதிக்கப்பட்ட ஹோட்டல்களிலுள்ள மொத்த அறைகள் 14ஆயிரம் ஆகும். இதுவரை ஆறு இலட்சம் சுற்றுலாப்பயணிகள் இந்த அறைகளைப் பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஹிக்கடுவையில் மாத்திரம் 1000 அறைகள் உள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் அவற்றில் 200 அறைகள் மாத்திரமே அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளதாக ஹிக்கடுவையிலுள்ள சுற்றுலா ஹோட்டல் துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஹிக்கடுவையிலுள்ள 60 சதவீதமான மக்கள் சுற்றுலாத்துறைச் சார் தொழில்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கின்றனர். இவர்கள் ஹோட்டல்கள், விடுதி, கடைகள் மூலம் வருமானம் ஈட்டுவதோடு சுற்றுலாவழிகாட்டி, படகோட்டி, வாடகைக்கார் முச்சக்கர வண்டிகள் [illegible]ாதிகள் என பல்வேறு தொழில்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர்.

## சுற்றுலா பயணிகள் வரும் நாடுகள்

டென்மார்க், சுவீடன், நோர்வே, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகமாக ஹிக்கடுவைக்கு சுற்றுலாவை மேற் கொள்கின்றனர். அதேபோல் ஜேர்மன், பிரான்ஸ், ரஷ்யா நாட்டவர்களும் தென் பகுதிக்கு அதிகளவில் வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை ஹிக்கடுவை ஹோட்டல்களிலுள்ள 70 அறைகளும் அடுத்த பருவகாலத்துக்காக ஏற்கனவே முற்பதிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு மூன்று வருடங்களில் ஹோட்டல்கள் சுற்றுலா பயணிகளுக்கு போதியதாக இருக்காது எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை எமது நாட்டு சிற்பிகளின் கைவண்ணத்தால் உருவாக்கப்படும் சிற்பங்களை சுற்றுலா பயணிகள் விரும்பி வாங்குகின்றனர். அந்நியச்செலாவணியை அதிகளவில் பெற்றுக்கொடுப்பதில் சுற்றுலாத்துறை பாரிய பங்களிப்பைச் செய்கின்றது. ஆகவே இத்துறையுடன் தொடர்புபட்டவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொடுத்து. சுற்றுலாத்துறையை நன்கு மேம்படுத்த நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொள்வதன் மூலம் 2014 ஆம் ஆண்டு 2 மில்லியன் சுற்றுலாப்பயணிகளை நமது இலங்கைக்கு அழைத்து வருவதற்கான இலக்கை அடையக்கூடியதாக இருக்கும்.

source: net











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE CELEBRATION
# THE MOMENTUM
# THE SPRIT
# ALL ON LBN

*Catch it on*
5 300 300
www.lbn.lk



THE CABLE TV NETWORK

LBN

## குட்டிக் கேள்வி குட்டி பதில்

சன் டிவி யில் ஒளிப்பரப்பாகும் தென்றல் நாடகத்தின் இயக்குனர் யார்?

இக்கேள்விக்கான நீங்கள் அனுப்ப வேண்டிய கூப்பன் பக்கம் 47 'ல்

வர்ணப்புடவை இலவசம்
எழுதியனுப்பவேண்டிய முகவரி:

**Spice Global Pvt. Ltd**
#48/3 B, 1/1, Dharmarama Road,
Colombo-06, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DF

# Devonsha
## FASHIONS

*Specialist in Wedding Sarees*




**ASLAM TRADE CENTRE**
188/4A, 1st Floor,
Keyzer Street,
Colombo-11, SriLanka
Mob: +94 776 619 619, Mob: +94 716 016 094

188/2D, Ground Floor,
Keyzer Street,
Colombo-11, SriLanka
T.P: +94 11 2 336 038

email: devo2418@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்



ஈழத்திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களிலொன்றாகப் போற்றப்படும் இத்தலம் பற்றிய பல்வேறு ஐதீகவரலாறுகள் கூறப்படுகின்றது. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு சென்ற நூற்றாண்டில் பொதுக்கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு, பொதுமக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. காலம் தவறாத பூசை, வழிபாட்டு ஒழுங்கு, திருப்பணி வேலைகள், அறநெறிப்பாடசாலை என ஆலயநிர்வாகம் மிகவும் சிறப்பாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது. ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று பல லட்சம் பத்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் தேர்த்திருவிழா நடைபெறும் மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கித் தினமும் வருகின்றனர்.

இப்புனித தலத்தின் கட்டட அமைப்பு நூற்றாண்டு கடந்த சுண்ணாம்பு கற்களாலான நிர்மாணமாக அமைந்திருந்தது. ஆலய வசந்த மண்டபம் மற்றும் பரிவார ஆலயங்கள் சீரான அமைப்பில் அமைக்கப்படாது உட்பிரகாரம் மிகவும் நெருக்கமாகவும் பக்தர்களுக்கு முழுமையாக பூசை வழிபாடுகளைத் தரிசிப்பதற்கு முடியாத நிலையும் காணப்பட்டது. இந்நிலையில் பழம்பெரும் இத்தலத்தைச் சிறப்பாக நெறிமுறைக்கு அமைய விசாலமாக அமைக்க வேண்டும் என்ற ஆவல் அடியார்கள் உள்ளத்தில் வியாபித்தது. ஆலய தர்மகர்த்தாசபை நாடறிந்த சிவாச்சாரியார் மற்றும் சமயப் பெரியோர்களை நாடி ஆலோசனை பெற்றனர். இந்திய சிற்பக் கலைஞர்களை அழைத்து சிவாகம நெறிமுறைக்கு அமைய கருங்கற்களாலான கருவறை அமைப்பைக் கொண்ட அசையா நிலைக் கோவிலை உருவாக்கத் திட்டமிட்டனர்.

அனுபவ ஞானமுடைய அகவை எண்பது நிறைந்த கீரிமலை சிவசிறீ நகுலேஸ்வரக் குருக்கள், கோப்பாய் சிவசிறீ வ.பரமசாமிக் குருக்கள் முன்னிலையில் ஆலய புனர் நிர்மாணத் திருப்பணி அங்குரார்ப்பணம் நடைபெற்றது. ஆலய பிரதமகுரு சிவசிறீ ஜெயக்குமாரக் குருக்கள் பாலஸ்தாபனக் கிரியைகளைச் சிறப்பாக நடாத்தி பாலாலயத்தில் விநாயகப் பெருமானையும் பரிவாரத் தெய்வங்களையும் இருத்தி திருப்பணிக் கடமைக்காக ஆலயத்தை ஒப்படைத்தார். மாமல்லபுரச் சிற்பக் கலைஞன் செ.ஞானமூர்த்தி அவர்களின் தலைமையில் இரவு பகலாக பிரமாண்டமான திருப்பணி வேலைகள் நடைபெற்ற வண்ணமாகவுள்ளது. இதுவரை நடைபெற்ற திருப்பணிகள் இந்தியாவிலுள்ள சோழர்காலத்திருக்கோவில்களின் வடிவம் போல் அடியார்களின் உள்ளத்தை ஆட்கொள்வதை உணரலாம். புதிய ஆலய புனரமைப்பு மிகவும் விசாலமான அமைப்பாக காணப்படுகிறது. யாழ் குடாநாட்டில் சிற்பம் நிறைந்த பெருங்கோவில் என்ற தனித்துவத்தை மருதடியான் திருக்கோவில் பறைசாற்றும் என அனைவரும் கருதுமளவுக்கு நிர்மாண அமைப்பு எழுச்சி தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY DREAM TATA



**என்றும் இல்லாத அளவிற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் டாடா நிறுவனம் பல சாதனைகளைப் புரிந்து வருகிறது.**

கோரஸ் நிறுவனத்தை பல ஆயிரம் கோடிகளுக்கு வாங்கியதைத் தொடர்ந்து உலகின் முன்னணி ஸ்டீல் நிறுவனங்களில் ஒன்றானது. பல ஹோட்டல்களையும் வாங்கியது. இதன் மூலம் தாஜ் ஹோட்டல் நிறுவனம் உலகின் முதல் 10 பெரிய ஹோட்டல் நிறுவனங்களில் ஒன்றானது. இப்பொழுது போர்ட் நிறுவனத்தில் இருந்து ஜக்குவார் மற்றும் லான்ட்ரோவர் போன்ற கார்களின் தயாரிப்பையும் வாங்க முயற்சி மேற்கொண்டு இருக்கிறது. இதன் வரிசையில் தற்போதைய சாதனை ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள காரை வெளியிட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு அவர்கள் இதற்கான முயற்சியை அறிவித்த போது எள்ளி நகையாடியவர்கள் பலர். ஆனால் திரு. ரத்தன்டாடா அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் தனது முயற்சியில் பின் வாங்காமல் தனது இலக்கை அடைந்து விட்டார். ஆனால் டாடா நிறுவனத்தின் மூலத்தை அறிந்தவர்களுக்கு இதில் ஒன்றும் ஆச்சரியம் இருக்கப் போவதில்லை.

1907 ஆம் ஆண்டு திரு. ஜாம்ஷெட்ஜி டாடா ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்ட இந்திய ரயில்வே துறைக்கு தண்டவாளங்கள் உற்பத்திசெய்து தர முன்வந்த போது ஸர் ப்ரெடரிக் அப்காட் எள்ளி நகையாடியதும் அல்லாமல் அவர்கள் அவ்வாறு செய்தால் அவர்கள் தயாரிக்கும் தண்டவாளங்களை விழுங்குவதாகவும் கூறினார். இதனைப் போன்ற பல எள்ளி நகையாடுதல்களையும் கடந்தே டாடாவின் சாம்ராஜ்யம் நிறுவப்பெற்றுள்ளது.

இவர்கள் தயாரித்த இந்த மலிவு விலைக் கார்கள் இலங்கை, இந்தியாவில் உள்ள மத்திய தர குடும்பத்தினருக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும். இரண்டு பல்ஸர் பைக்குகள் வாங்கும் செலவில் ஒரு கார் வாங்கி விடலாம். இனி சில ஆண்டுகளில் குடும்பத்தலைவர், தலைவி, இரண்டு குழந்தைகள் அனைவரும் ஒரே இரு சக்கர வாகனத்தில் செல்லும் காட்சியை காண முடியாமல் போகலாம். நகரங்களில் இரு சக்கர வாகனங்களினால் ஏற்படும் உயிரிழப்புகள் வெகுவாகக் குறையலாம்.

குறிப்பாக இந்தக் கார் ஆட்டோவிற்கு நல்லதொரு மாற்றீடாக அமையலாம். ஒரு லிட்டருக்கு சுமார் 25 கிலோமீட்டர்கள் தூரம் செல்லும் இந்தக் காரினால் பல ஆட்டோ ஓட்டுனர்கள் இதனை வாடகைக்கு ஓட்ட முற்படலாம். ஓட்டுனர் தவிர நான்கு பேர் அமர முடியும் என்பதால் மக்களும் ஆட்டோவிற்கு பதில் இதில் பயணம் செய்ய முற்படலாம். ஆட்டோ ஓட்டுனர்களுக்கும் சிறிது பணம் அதிகம் கிடைக்கும். குறிப்பாகப் பாடசாலைச் சிறுவர்களை, சிறுமிகளை ஆட்டோவிற்குள் புளி மூட்டை போல அடைத்துச் செல்லும் அவல நிலை மாறலாம்.

ஆனாலும் இதனால் ஒரு சில பாதகங்களும் இல்லாமல் இல்லை. பாதுகாப்பு அம்சங்களில் குறைபாடு பெரிய அளவிற்கு இல்லை என்பதால் நகரத்திற்குள் பயணிக்க மிகுந்த யோசனை தேவை இல்லை என்பது எனது கருத்து. ஆனாலும் வெளியூர்களுக்குச் செல்ல இதனைப் பயன்படுத்துவதற்கு முன் சிறிது யோசனை தேவை. மேலும் நகரத்திற்குள் சாலைகளில் நெரிசல்கள் பல மடங்கு உயரும். மேலும் இதன் மூலம் சுற்றுச் சூழல் அதிகம் மாசுபடலாம் என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், இந்த கார் இரு சக்கர வாகனங்களுக்கு மாற்றீடாக இருப்பதை விட ஆட்டோவிற்கு மாற்றீடாக இருப்பதே மேல் என்று எனக்குத் தோன்றுகிறது.

## புதிய கார்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைகள் புரியும் புனிதரே!

புதுமைகள்
புரியும்
தூயவரே!
புதுமைகள் உம்முடைய
வார்த்தைகளுக்காகக் காத்திருந்தன.
நீர் அங்கலாய்பினாலும்,
வேதனைகளினாலும், கஷ்டங்களினாலும்
வருந்தி வாடி இருப்போருக்கு
குரல் கொடுக்கவும் தயாராக இருந்தீர்.
இதனால் தூண்டப்பட்ட
நான் என்னுடைய அங்கலாய்ப்பு,
வேதனைகள், கஷ்டங்கள்
அனைத்தையும் உம் பாதம்
ஒப்படைக்கின்றேன். என்னுடைய
வேண்டுதலுக்குச் செவிசாய்த்து
புதுமை செய்தருளும் அற்புதரே!



ஓ
கருணையும்,
அன்பும் நிறைந்த
தூய அந்தோனியாரே!
மனித உள்ளங்களின் மீது
அனுதாபம் உள்ளவரே!
என்னுடைய தேவைகள்
மன்றாட்டுக்களை,
உம்முடைய கரங்களில்
நீர் தாங்கியிருக்கின்ற
குழந்தை இயேசுவின்
காதுகளில்
இரகசியமாகச் சொல்லிவிடும்.
அதற்கு ஈடாக என்னுடைய
உள்ளம் எப்பொழுதும்
உமக்காகவே வாழும்.

தம்மை நாடிவரும் அனைத்து மக்களின் குறைகளைத் தீர்த்து இரட்சிக்கும் கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல வருடாந்த புனிதரின் பவனி திருவிழா எதிர்வரும் 13-06-2011 அன்று வழமைபோன்று பல்லாயிரம் பக்தர்களோடுவெகு சிறப்பாக நடைபெறும். 03ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 10 நாட்கள் தொடர்ச்சியாக விழாக்கோலம் காணும். புனிதரின் திருவருளால் வெற்றி பெற்றவர்கள், நோய்களிலிருந்து விடுதலை பெற்றவர்கள், இக்காலகட்டத்தில் தமது நேர்த்தியினை நிறைவேற்ற உணவின்றித் தவிக்கும் பலருக்கு, மூன்று வேளையும் உணவு வழங்கி அகமகிழ்வார்கள்.

அந்த அற்புதரின் அருளாசி பெற்று பயன்பெறும் பக்தர்கள் நாளாந்தம் பெருகி வருவதாலேயே, வருடாந்தம் நடைபெறும் அவரது திருப்பவனியன்று எண்ணிலடங்காத கூட்டம் மதிய நேரத்திலிருந்து ஆலய வாசலில் காத்திருந்து, மாலை நேரம்பவனிவரும் அவரது திருமுகம் கண்டு களிப்புற்று, தம்மால் இயன்ற மலர்மாலைகளை அவருக்குச் சமர்பித்து, கீதங்கள் பாடி அவரது திருப்பவனியில் கலந்து கொள்வார்கள்.

## பாதுவா நகரத் தூய அந்தோனியாருக்கு நவநாள் ஜெபம்.

புனித அந்தோனியாரே, இறைவனின் தூதரே. ஆற்றல்மிக்க போதகரே. எங்கள் குறைகளைக் கேட்பவரே.
நீர் வாழ்க! அன்று பாலஸ்தீன் நாட்டிலே எல்லாவிதமான குறைகளை உடையோர் இயேசுவை நாடிச்சென்றனர்.
கடவுளின் அன்பையும், ஆற்றலையும், மன்னிப்பையும் நேரடியாகப் பெற்றுத் திரும்பினர்.
இன்று இறைமக்களாகிய நாங்களும் உம்மைத்தேடி வருகின்றோம்.
தனிமை, நோய், ஏழ்மை, சமூக இன்னல்கள், வேற்றுமைகள், பாவங்களில் துன்புறும் நாங்களும்
இறையன்பைக் கண்டு களிக்க அருள் புரியும். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை.
அவர் தாழ்ந்தோரை உயர்த்துவார். பசியால் வாடுவோருக்கு அருள் புரிந்து பல நலன்களால் அவர்களை நிரப்புவார்.
அற்புதரே! என்றும், எங்கும், எப்பொழுதும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பூவே நீ...

பூவே உனைப் பார்த்தேன் நீ
மொட்டாய் இருந்த போது
பூவே உனைச் சுவாசித்தேன் நீ
மலராய் மலர்ந்த போது
பூவே உனைப் பறித்தேன் நீ
அர்ச்சனைப் பூவானாய் ஆலயத்தில்
பூவே உன்னழகைக் கண்டேன் நீ
மங்கையின் கூந்தலில் இருந்தபோது
பூவே உனைக்கண்டு நொந்தேன் நீ
சருகாய்க் குப்பையில் கிடந்தபோது

ஆக்கம்.... தங்கம்



## அகரம்

தாயே உந்தன் மடியை நானும்
சாவிலும் கூட மறப்பேனோ
தாரம் வந்து சேர்ந்த பின்பும்
உன்மேல் அன்பை மறப்பேனோ - உன்
மாசற்ற மார்புதனில் முலைப்பால் அருந்த
மீண்டும் கன்று ஆகேனோ - என்
வாய் மொழிந்த மழலைகள் கேட்டு
உன் மைவிழி சிரிக்கக் காணேனோ
கைகளில் தவழ்ந்து செந்நீராட்டம் பெற்று
தாய்மையின் சூட்டில் சேரேனோ - நீ
இனிதே இயம்பும் தாலாட்டுக் கேட்டு
மெல்லக் கண்ணுறக்கம் செய்யேனோ
பொன்விழி திறக்கும் வரை தன் உறக்கம் கலைத்து
துயிலும் மைந்தனவன் சுவடு காப்பவளே
உன்னை தாங்கவென்றால் நானும் மெய்
வருத்தம் பார்ப்பேனோ...?
ஒத்த ஜென்மக் கடனைத் தீர்க்க
நூறு ஜென்மம் போதுமா - அடி
பெத்தவளே உன் வலியைப் போக்க
மழலை வாய்ச் சிரிப்பே போதுமா ?
அம்மா............
அகிலம் போற்றும் ஆலயம் - நீ
அன்பில் செய்த ஓவியம்
கருணை மொழியின் காவியம் - அந்த
கடவுள் உறையும் கருவூலம்
நீயும் ஆரிரரோ பாடும் போது
அலை கடலும் தூங்கிடுதே
அள்ளி அணைத்துச் சேர்க்கையிலே
என் சிணுங்கலும் ஓய்ந்திடுமே
பெற்றெடுத்த வலி தீரு முன்னே
கத்துமென்னைக் கையிலெடுத்தாய்
நீ இறைவனிடம் சென்ற பின்பு
யாரம்மா என்னைக் கருத்திலெடுப்பார்....?

அன்னையர் தின வாழ்த்துக்களுடன்
புஸ்பநாதன் நிசாந்த்
கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Lifestyle Spa
Exclusively for Ladies

A visit to The LifeStyle Spa ensures a change in one's

# LIFE STYLE

When it comes to having a healthy lifestyle and healthy living, the first thing that comes to mind is exercise and eating the right kind of 'healthy 'food. Most of us never seem to consider the fact that even treating our body well, also leads to a healthy lifestyle and healthy living.

The Lifestyle Spa might not **spark** an interest immediately, but one look at their list of treatments and great services on offer, and you might actually want to change your mind. Located conveniently in Colombo – 04 (Bambalapitiya) the Spa is an exclusive hotspot for **ladies only** and offers various treatments including a body shaping treatment for very reasonable prices.

The Lifestyle Spa's main treatment is the body shaping treatment, which emphasizes on the stomach. It is a unique treatment that focuses on breaking up the built fat in the tummy area using a Chinese method of pressure point massaging. The hardened fat breaks up and is equally distributed in a manner that gets passed out almost immediately and thereafter tightens the skin in the area and firms the body. The Spa guarantees to take off **2 cms** from each client's waistline every Session, in 45 min for only 1100/-. Clients have an added bonus with that fact that the Spa also offers a **money back guarantee** if the client does not lose. **No one else in Sri Lanka offers a guarantee like this.........** The body shaping treatment is available for the thighs and arms as well. However the Spa cannot guarantee a **2 cms** reduction,in these areas as it will vary from client to client...... **No medication,No side effects, No diet.**

The atmosphere is most certainly relaxing and comforting. The space of the Spa isn't too large which is also suitable as they take in only a few clients per day and only those who make an appointment prior to coming to the Spa. A special client's visit card is made available to ensure them as well as the staff to keep track of the treatments and also results of the body shaping treatment. Parking isn't an issue to debate about either as there is plenty of space down the road. The Spa guarantee's 100% customer satisfaction with the treatments on offer.

Treatment's ranging from a beauty facial that includes a special pressure point massage to lift the skin, reduce wrinkles and improve blood circulation to a crystal foot treatment (their own version of a pedicure) Which involves the feet been treated with a crystal gel. that smoothens the skin,increases blood circulation and gives an overall sense of relaxation to the entire body, dead Skin removal, a massage and reflexology, the treatments are endless. The Lifestyle Spa is a space where ancient Chinese methods are merged beautifully and aesthetically with the latest equipment to give their clients an experience of a lifetime.

In addition to the extensive line up of treatments, The Spa has introduced 3 new unique treatments, Which include, **Cellulite reduction treatment, Full body relaxation treatment & The full body Scrub.** Cellulite reduction treatment is a special massage using imported Oils to flush out all the Cellulite fat and toxins from the body and cleanse the entire system. This treatment compliments the stomach Reduction treatment.

Want to hydrate,treat, purify, and soothe your mind, body and soul ? Have a change of lifestyle with **The Lifestyle Spa** and feel better every single day.







**Open from Tuesday to Sunday, 9 am to 6 pm. Open even on Public Holidays and Mercantile Holidays.**

**For Appointments Call : 0114879498,0112585487** www.thelifestylespa.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TIRED OF STRUGGLING TO FIT INTO YOUR PANTS ??

**100% NATURAL TREATMENTS**
(No medication, No side effects)



BEFORE AFTER

## MEET THE SOLUTION !

- 45 min only
- Money back guarantee (don't lose, don't pay)
- Unique pressure point massage
- Open on all holidays
  (Tuesdays to Sunday 9.00 AM to 6 PM)
- Optional Cellulite Reduction Treatment 1800/=

## LOSE 2CM PER SESSION FOR ONLY 1100/-



## Bridal Package

1) Full Body Scrub
2) Body Shaping
3) Crystal Foot **(Special Pedicure)**
4) Crystal Hand **(Special Manicure)**
5) Facial

* Optional - Pre Wedding Full Body Massage 1500/-

Where in Sri Lanka can you get 3-1/2 hours worth of exclusive Spa Treatment, for only 5000/=?

Cheapest in the market

## TREATMENTS AND PRICE LIST

**The Life Style Spa Treatments**

| | |
|---|---|
| 1)Body Shaping - 45 min | 1100/- |
| 2)Facial - 1 hour | 2200/- |
| 3)Clean Up - 45 min | 1000/- |
| 4)Pimple (Acne) - 40 min | 3800/- |
| 5)Facial Bleaching - 1 hour | 2000/- |
| 6)Crystal Foot - 1 hour | 1600/- |
| 7)Double Chin - 20 min | 800/- |
| 8)Ear Treatment - 20 min | 800/- |
| 9)Leg Massage - 20 min | 500/- |
| 10) Activity Control Treatment - 30 min | 9500/- |

**A 10 Setion Programs, using Special medicinal Creams designed to :**

A.Reduce Wrinkles
B.Lift up Skin
C.Removal of Dark Circle around the Eyes
D.Pigmentation Mark Removal

| | |
|---|---|
| 11) Cellulite Reduction Treatment (Massage) 1 hour | 1800/- |
| 12) Relaxation Treatment (Massage) 1 hour | 1500/- |
| 13) Foot Massage - 45 min | 700/- |
| 14) Body Scrub - 45 min | 800/- |

The L!festyle Spa
Exclusively for Ladies

Block F2-1, Bambalapitiya Flats, Colombo-04, Srilanka.
T.P. : +94 11 2585487, +94 11 4879498 www.thelifestylespa.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மின்சார மங்கள வாத்தியம் 9’ 12’ 15’ 18’ 24’ 30’
Original லக்ஷ்மி வெட் கிரைண்டர்கள்
எவர்சில்வர் பாத்திரங்கள்
இந்திய சுவாமிப்படங்கள், மாலைகள்
பரத நாட்டிய ஒட்டியான செட், கால் சலங்கைகள்
பித்தளை கைமணிகள், ஆலய வெண்கல மணிகள்
வெண்சாமரை சோடனை உபசாரப்பொருட்கள்,
கும்ப தீபம், ஏனைய பூஜை தீபங்கள்
இந்திய கருங்கல் சிற்ப சிலைகள்,
பஞ்சலோக விக்கிரகங்கள் Black Metal சிலைகள்
திருவாசிகள், ஆசனத்தகடுகள், கலசங்கள்,
சரவிளக்குகள் கும்பக்குடைகள், 8 பிரம்பு,
12 பிரம்பு, சந்திரவட்டப்பட்டுக்குடைகள்,
பட்டு ஆலவட்டம், பட்டு சுருட்டி, திரைச்சீலைகள்,
மகரதோரணம், வெள்ளி தங்கமுலாம் கிரீடங்கள்,
அங்கிகள், முத்து கிரீடங்கள் பதக்கங்கள்,
வாகமாலைகள், கெண்டி, மாலைகள்,
மற்றும் செம்பு (Copper)
பித்தளை வீட்டு பூஜைப்பொருட்கள்,
மரக்கைவினைப்பொருட்கள்,
பித்தளை, செம்பு, Black Metal, White
Metal Handicrafts Items






# Gokule Raadhai

No.184A, Sea Street,
Colombo-11 T.P: 2421912








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Shakthi Classical Dance Star

**Shakthi Classical Dance Star** எனும் மாபெரும் போட்டி நிகழ்ச்சியாக தென் இந்திய சாஸ்திரிய நடனத்தை ஏற்பாடு செய்து நிகழ்த்திய பெருமை சக்தி தொலைக்காட்சியினரையே சாரும். ஆரம்பத்தில் அகில இலங்கை ரீதியாக முதல் சுற்றில் 27 குழுக்கள் பங்கு பற்றி அதில் 18 குழுக்கள் இரண்டாம் சுற்றில் தெரிவாகி பின் 09 குழுக்கள் மூன்றாம் சுற்றுக்குத் தெரிவாகி இறுதி சுற்றுக்கு 04 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டது.

**அக்குழுக்களாவன,**

**வவுனியா - கனகாம்பரம் குழு....** **பதுளை - தாமரைக் குழு...**

**திருகோணமலை - நீலோற்பலம் குழு...** **மட்டக்களப்பு - முல்லைக் குழு**

இக்குழுக்களின் இறுதிச்சுற்று 29-04-2011 அன்று மருதானை ஆனந்தாக் கல்லூரியில் குலரட்ண மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் மட்டக்களப்பின் "பரதகலாலயா" நிறுவனத்திலிருந்து போட்டியில் பங்கு பற்றிய முல்லைக் குழுவினர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். போட்டியில் இடம்பெற்ற சுற்றுக்களில் சாஸ்திரிய நடனம், கிராமிய நடனம், சமகாலத்திய நடனம் ஆகிய நடனங்களில் அதி திறமையாக நடனமாடி முதலாம் இடத்தை முல்லைக் குழுவினர் பெற்றுக்கொண்டனர்.

இக்குழுவின் ஆசிரியர் பரதசூடாமணி, நாட்டியக் கலைமணி, நர்த்தன வித்தகி, நிருத்திய வாணி, நிருத்தியப் பேரொளி ஸ்ரீமதி சுபித்திரா கிருபாகரன் அவர்களுக்கும் இவரது மாணவர்களான முரளிதரன் சதீஸ்குமார், ஜோன்சன் கஸ்மியர், கருணாநிதி தனஞ்ஜெயன், மாணிக்கவாசகம் சுகிர்தகுமார், நகுலேஸ்வரி தனேந்திரராஜன், ராஜரட்ணம் காயத்ரி, நந்தகுமார் அமலினி, ரெட்ணராஜா இவாஞ்சலின் திவானி ஆகிய முல்லைக் குழுவினருக்கும் சக்தி **Classical Dance Star** நடனச் சின்னமும், ரூபா நான்கு லட்சம் காசோலையும் வழங்கி கௌரவித்தனர். மாணவர்களுக்கு சான்றிதழும் இந்நிகழ்வின் போது வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு பரதகலாலயாவின் முல்லைக் குழுவினரை 01-05-2011 அன்று புகையிரத நிலையத்திலிருந்து தமிழ் கலாசார வரவேற்புடன் மட்டக்களப்பு எல்லை வீதி, திசவீரசிங்க சதுக்க பொதுமக்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் மிகுந்த மாலை மரியாதையுடன் வரவேற்றனர். மேலும் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ பொன். செல்வராஜா அவர்களும் கௌரவ யோகேஸ்வரன் அவர்களும் கௌரவ அரியநேந்திரன் அவர்களும் வரவேற்பில் கலந்து கொண்டு பார்வீதி வழியாக அழைத்து வந்து, சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தில் பாராட்டுரைகளை நிகழ்த்தினர். மட்டக்களப்பு வாழ் மக்கள், கலைஞர்கள், பரத கலாலயா நடனமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி இந்நிகழ்வை மேலும் சிறப்பித்தனர். இந்நிகழ்வை ஏற்பாடு செய்த ஏற்பாட்டுக் குழுவினருக்கு பரதகலாலயா முல்லைக் குழுவினர் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இவ்வாறான ஓர் நடன நிகழ்வுக்காக மிகுந்த பாராட்டும் கௌரவமும் பரதகலாலயாவின் முல்லைக்குழுவினருக்கு கிடைத்தமை மட்டக்களப்பு சமூகத்தின் கலை ஆர்வத்தையும் அதனை வளர்ப்பதில் உள்ள ஈடுபாட்டினையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

ஆக்கம்: மயுரா எழில்நாதன் (மட்டுநகர்)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அனுபவங்களைச் சொல்லித்தரும் இழப்புகள்

மரங்கள் இலைகளை இழப்பதால், பட்டு விடுவதில்லை, புதிய இலைகளோடு மீண்டும் தளைத்து வளருகின்றன. இழந்து, இழந்து, பெற்றுக் கொள்ளுவதுதான் இன்பகரமான வாழ்க்கை, தினமும் பழைய செயல்களை இழந்து நாம் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். குழந்தைப் பருவத்தை இழந்து இளைஞர்களாகின்றோம், வாலிபப் பருவத்தை இழந்து முதியவராகிறோம், முதுமையை இழந்து வாழ்க்கையையும் முடித்துக் கொள்கின்றோம். இழப்பில்லாமல் மாற்றமில்லை. இழப்புகளுக்கு தயாராகிக் கொள்ளுவோம்

பத்து வருடங்களுக்கு ஒருமுறை நாமே நம்மை படம் எடுத்து வைத்து, அதை ஐம்பது வருடத்தின் பின் அந்த ஐந்து படங்களையும் எடுத்து வைத்துப் பார்த்தால், அவை ஐந்தும் எவ்வளவு வித்தியாசங்களை நமக்குக் காட்டும். நாம் நமது தோற்றங்களை இழந்துதான் இவ்வளவு தூரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இழப்புகளிலிருந்து தான் புதிய உலகம், புதிய இயற்கை உருவாகி கொண்டிருக்கின்றது. இழப்பு நிரந்தரமல்ல, அது புதிய வாழ்வை உருவாக்கித்தரும், புதிய அனுபவங்களைச் சொல்லித்தரும்.

நம்வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகள் நம்மை உருவாக்குமே தவிர, அழிக்காது. குப்பையில் கிடக்கும் மனிதர்களில் கூட நம்ப முடியாத மாற்றங்களைக் காணமுடியும். சிலருடைய வாழ்க்கையில் எதுவுமே இருக்காது, எந்தவகையான ஆசீர்வாதமும் இல்லாமல் பட்டுப்போன மரத்தைப் போல வாழ்வார்கள். பட்ட மரத்தைப் பார்த்து "ஏ" மரமே நீயும் நானும் ஒன்று போல இருக்கின்றோம், எதுவுமில்லாமல் வரண்டு விட்டோம் என்று அந்த மரத்துடன் சேர்ந்து அழலாம், அப்படி அவர்களுடைய வாழ்க்கை பட்டுப் போயிருக்கும்.

சில நாட்கள் சென்று, பல கால நிலைகளைக் கடந்தபின், அந்தப் பட்டமரம், துளிர்த்து முன்பைவிடச் செழித்து வளர்ந்து விடும். அதைப்பார்க்கும் அந்த மனிதனுக்கு அப்போது நம்பிக்கை வரும். இந்த மரத்தைப் போல நமக்குள்ளும் விருட்சங்கள் மீதமிருக்கிறது, இந்த மரத்தைப் போல நாமும் ஆசீர்வதிக்கப் படுவோம் என்ற நம்பிக்கை வந்து விடும் எனவே இழப்புகள் நிரந்தரமில்லை. எல்லாம் இழந்தாலும் இன்னும் வாழ்க்கை இருக்கிறது.

விரும்பிய உறவுகள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் விலகிப் போகலாம். அவர்களை இழந்து விட்டோமே என்று நீங்கள் மனதளவில் பாதிக்கப்படலாம், தனிமை உங்களை வதைக்கலாம் அப்போதும் சோர்ந்து போகாமல் தைரியமாக இருங்கள். ஒரு இழப்பு உங்களுக்கு இன்னொன்றைக் கொண்டுவரும். அது மனித உறவாக மட்டுமல்ல வாழ்க்கைக்குத் தேவையான எதுவானதாகவும் இருக்கும். நாம் போடுகின்ற கணக்குகள் தவறி விடும்போது புதிய வழியைச் சொல்லி தருவது இழப்புகள்தான்.

நாம் அதிகம் அழுதுவிட்டோம், இனி வரும் சோகமும் ஏற்கனவே வந்தவைகளைப் போன்றுதான் இருக்கும். எத்தனை நாளைக்குத்தான் ஒரே மாதிரி அழமுடியும், போனால் போகட்டும் போடா என்று விட்டு விடுங்கள். நாம் உருவாக்க வல்லவர்கள், எதையும் புதிதாக உருவாக்குவோம், எல்லாம் இழந்தாலும் இன்னும் வாழ்க்கை இருக்கிறது என்பதை நம்பி வாழ்க்கையை புதிதாக உருவாக்குவோம்

## மாதம் ஒரு மணிக்குறள்

**கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்**

கடவுளின் திருவடிகளை வணங்காதவன்
என்ன படித்தும் ஒரு பயனும் இல்லை

**அதிகாரம் : கடவுள் வாழ்த்து**
**குறள் : 2**



# வீர இளைஞர்களுக்கு

தமது பணிகளை முன்னின்று நடத்த வேண்டும் என்ற அவா உடையவர் விவேகானந்தர். ஆகவேதான் இளைஞர்களுக்காக எழுதிய கடிதங்களில் தனது உணர்ச்சிகளைக் கொட்டி எழுதியவற்றில் சில:-

சுயநலமற்ற, முழு ஆற்றலையும் கொண்டு பணி புரியவல்ல, உயிர் போகும் வரையிலும் பாடுபடத் தயாராக இருக்கும் இளைஞர்களே!
உங்களிடம் நான் மற்றவர்களைவிட அதிக நம்பிக்கை வைத்திருக்கின்றேன். எதையும் உங்களால் சாதிக்க முடியும் என்று நம்புங்கள். இறைவன் நமது சார்பில் இருக்கிறான் என்பதை அறியுங்கள்.
எனவே தைரியமுள்ள இளைஞர்களே! முன்னேறிச் செல்வீர்களாக!

### எனது வீர இளைஞர்களே!

உத்தம குணம் வாய்ந்த நல்லோர்களே! நீங்கள் செயல் புரியத் தொடங்குங்கள். முன்னேற்றம் என்னும் தேர்ச்சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். பெயருக்காகவோ புகழுக்காகவோ அவை போன்ற பொருளற்ற வேறு எந்த அற்ப விஷயத்திற்காகவோ திரும்பிப் பார்க்க நில்லாதீர்கள்! சுயநலம் என்பதை அறவே தூர எறிந்து விட்டு வேலை செய்யுங்கள். எங்கள் அனைவரின் மீதும் ஆண்டவனின் ஆசிகள் பொழியுமாக!

### எனது இளைஞர்களே!

வேலையைச் செய்யத் தொடங்குங்கள் அதற்கான வேகத் தீ உங்களை வந்தடையும். வாழ்நாள் குறகிய அளவானது. பெருங்காரியம் ஒன்றின் பொருட்டு அதைத் தியாகம் செய்துவிடுவீர்களாக! பணி புரிவீர்களாக! தைரியம்மிக்க இளைஞர்களே! நீங்கள் அனைவரும் மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்காகப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள். தைரியம் மிக்க இளைஞர்களே நீங்கள் அனைவரும் நல்ல முறையில் பணியாற்றுங்கள்.
கோழைத்தனம் கூடவே கூடாது!
வீரர்களாக திகழுங்கள்!
உயிரே போவதானாலும்
நேர்மையுடன் இருப்பீர்களாக!
உங்களில் ஒவ்வொருவரும் பேராற்றல் படைத்தவராக வேண்டும்.

இது நிச்சயம் முடியும் என்றே நான் கூறுகிறேன். மிகப் பெரிய உண்மை இது - வலிமைதான் வாழ்வு; பலவீனமே மரணம். வலிமையே மகிழ்ச்சிகரமான வாழ்க்கை. நிரந்தரமான வளவாழ்வு, அமரத்துவம் ஆகும். பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது. உனக்குள் அளவற்ற ஆற்றலும் அறிவும் வெல்ல முடியாத சக்தியும் குடி கொண்டிருக்கின்றன என்று நீ நினைப்பாயானால் அந்த சக்திகளை உன்னால் வெளியே கொண்டுவர முடியும். ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்கு. நீ மனிதனாகப் பிறந்திருக்கின்றாய், நீ வாழ்ந்து மறைந்ததற்கு உன்பின்னால் ஓர் அழியாத அறிகுறி எதையாவது விட்டுச் செல்.

**விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எங்கள் வெற்றிக்கு விடாமுயற்சியே காரணம்.

நவீன் செரமிக் ஸ்தாபனத் தலைவர் திரு. சி. தயாளன் அவர்களை எமது நேர்காணலில் சில கேள்விகள் தொடுத்தபோது, அவரால் சட்டென அளிக்கப்பட்ட பதில்கள்...

**கேள்வி:** ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி என்பது, சினிமாவில் வருவது போல சட்டென வராது. கடுமையான போட்டிகளை சந்தித்து, விடா முயற்சியுடனும், துணிச்சலுடனும் கூடிய செயற்பாட்டாலேயே ஒரு நல்ல நிலையை அடைய முடியும். நீங்கள் இந்தளவுக்கு வளர்ச்சி அடைந்த காலகட்டங்கள் உங்கள் அனுபவங்கள் எப்படி?

**பதில்:** ஆரம்பத்தில் வெறும் 4 பேருடன் மட்டுமே நாம் எமது நிறுவனத்தை தொடங்கினோம். இத்துறைக்கு நாம் புதிது என்பதால் அன்றைய காலகட்டத்திலிருந்த போட்டிகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப போராட்டமாகவே ஆரம்பித்தோம். ஆரம்பம் முதல் மக்களின் கவனத்தை எமது பக்கம் ஈர்க்க மிகவும் பாடுபட்டோம். தரமான விலையிலமைந்த நல்ல பொருட்களை (Branded Product) மக்கள் வரவேற்பார்கள் என நாம் அவர்களிடமே கற்றறிந்தோம். இன்றுவரை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தரமான செரமிக் பொருட்களை (Branded Product) மட்டுமே இறக்குமதி செய்து, நாடளாவிய ரீதியில் விநியோகம் செய்து வருகின்றோம். தொடர்ச்சியான எமது வளர்ச்சி பாதையில் எமக்கமைந்த நம்பிக்கையான ஊழியர்களின் மூலம் எமது ஸ்தாபனத்தினை முன்னேற்றிக் கொண்டோம்.

**கேள்வி:** எவ்வளவோ பேர் இத்துறையில் உள்ளபோதும், நீங்கள் மட்டும் இப்படியொரு மகத்தான வெற்றி பெற்றது எப்படி?

**பதில்:** சாதாரண விநியோக முறையாக ஆரம்பித்து, மொத்த வியாபாரமாகி, நாடு முழுவதும் ஏக விநியோகஸ்தர்களும் நிறுவப்பட்டனர். அதனைத் தொடர்ந்து கொழும்பில் கட்டப்படும் தொடர்மாடிகள் எங்கள் கவனத்திற்கு வந்தது. நாம் மொத்த வியாபாரத்தை இரு துறைகளாக பிரித்து, சாதாரண விநியோக முறையை ஒரு புறமாகவும், கட்டிட நிர்மான பிரிவினை ஒருபுறமாகவும் வேறுபடுத்தினோம். எமது நிர்வாக இயக்குனர் திரு. விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் இதற்கென திறமையான ஒரு குழு நிறுவப் பட்டது. இவர்களது பாரிய முயற்சியினாலேயே பெரும் பான்மையான தொடர்மாடிகளில் நவீன் செரமிக்ஸ் டைல்ஸ் பதிக்கப்பட்டது. இதன் பின்பு பெரிய பெரிய கட்டிட நிர்மானங்கள், ஹோட்டல் அனைத்தும் எங்கள் வசமானது. இதற்குக் காரணம் இலங்கையில் நடைபெறும் அனைத்து Architect Exhibition இல் நாம் கலந்து, எமது காட்சியறைகளை பிரமாண்டப்படுத்தி, அதன் மூலம் நாம் பெற்ற தொடர்புகளினால்தான். எமது இன்றைய சாதனைகள்...

**Local Projects:** American College, Ceylon Petroleum Corporation, Etisalat, Inland Revenue, Crescat Residencies, Abans, Sri Lanka Customs, Dewatagaha Mosque

**Overseas Projects:** Brandix-India, National Disaster Management Project-Maldives, Velaanaage Office Building-Maldives, Four Season Resorts-Maldives, Indra Gandhi Memorial Hospital-Maldives, Public Health Department-Maldives, New Wave Housing Projects-Maldives, Seena Building-Maldives, Majidheemaagu Ten Storey Building-Maldives.

எங்கள் 16வருட கால வெற்றிக்கு விடா முயற்சியே காரணம்.

**கேள்வி:** கடுமையான போட்டிகள் உள்ள காலகட்டத்தில் நீங்கள் காட்டிய வியாபார நுணுக்கங்கள் எவ்வாறு?

**பதில்:** நான் முதற்குறிப்பிட்டதுதான், தரமான விலையில், நல்ல பொருட்களை (Branded Product) மட்டுமே வழங்கிமையே. அதுவும் அப்பொருட்களுக்கான நாடளாவிய ரீதியில் ஏக விநியோக உரிமையை, இறக்குமதி செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களிடம் ஒப்பந்தம் மூலம் நாம் ஏற்படுத்தி கொண்டோம். எனவே தரமான பொருள் தேவைப்படும் பட்சத்தில், மக்கள் எம்மை மட்டுமே நாடினார்கள். மேலும் நாம் வழங்கிய இதர சேவைகளான டைல்ஸ், செரமிக் குளியலறை பொருத்திகளுக்கான கடன் வசதி, இலவச விநியோக முறை, இலவச சாம்பிள், டைல்ஸ் பதிப்பு செய்ய அனுபவமுள்ளவர்களை நிறுவியது.

புதிதாக வீடு, அலுவலம், வேறு ஏதேனும் கட்டிடம் ஒன்றினை அமைக்க முன்வருபவர்களுக்கும், புனரமைக்க இருப்பவர்களுக்கும் கட்டிட நிர்மான முறையின் வரைபடத்தை பார்த்து, நாம் ஒரு சிறந்த ஆலோசனை சேவையினை இலவசமாக வழங்குகின்றோம். குளியலறை, வரவேற்பறை, படுக்கையறை, சமையலறைகளில் தரை அளவுக்கு ஏற்ப எவ்வாறு டைல்ஸ் பதிப்புகள் அமைய வேண்டும். சுவரில் அனாவசிய விரயம் ஏற்படாமல் எவ்வாறு டைல்ஸ் பதிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் நீண்ட கால பாவிப்புக்கு டைல்ஸ் பராமரிப்பு முறைகளும், குளியலறையில் பொருத்திகளை எங்கு, எவ்வாறு பொருத்தினால் கூடிய அளவு இடத்தினை பாவனைக்கு உட்படுத்த முடியும் என்பது பற்றியும் எமது கருத்துக்களை வழங்குகின்றோம்.

**கேள்வி:** காலத்துக்கு காலம் டைல்ஸ் இறக்குதி செய்யும் நாடுகள் வேறுபட்டமைக்கு என்ன காரணம்?

**பதில்:** ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து மட்டுமே இறக்குமதி செய்தோம் காரணம், நமது நாட்டுக்குச் சமீபமாக உள்ளதால் இலகுவாக அமைந்தது. காலமாற்றத்தில் வெளிநாட்டுத் தயாரிப்புகளின் தரத்தினை நாம் பரிசோதித்து அவற்றையும் அறிமுகப்படுத்தியமையால், மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றோம். இன்றைக்கு தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, சீனா, ஸ்பெயின், இந்தியா போன்ற பலநாடுகளிடமிருந்து, தரமான பொருட்களை (Branded Product) மட்டுமே இறக்குமதி செய்து விநியோகித்து வருகின்றோம்.

**கேள்வி:** உங்களது வியாபார வளர்ச்சியினால் பயனடைந்த வர்கள் யார்?

**பதில்:** எமது வளர்ச்சியினால் குறிப்பாக நாம் நிறைய வேலை வாய்ப்புகளை வழங்கி, அதன் மூலம் பயனடைந்தவர்களை குறிப்பிடலாம். தலைமையகம், கிளைகள், களஞ்சியசாலைகள் என எமது சகல பிரிவுகளிலும் இன்றைக்கு 250 விசுவாசமான ஊழியர்கள் தொழில் புரிகின்றனர். மேலும் எம்மோடு பணிபுரிந்து நல்லதொரு செரமிக் வியாபாரத்துறை அறிவினைப் பயின்று, பின்னர் விலகிச்சென்று சொந்தமாக தொழில் புரிபவர்களும் எம்மால் பயனடைந்தவர்களே. முக்கியமாக எமது நிறுவன பொருட்களைத் தமது இல்லத்தில் அல்லது கட்டிடத்தில் பொருத்தி பயனடைந்து மகிழ்ந்த வாடிக்கையாளர்கள், கட்டிட நிர்மாணிப்பாளர்கள் பலர் நாடு முழுவதும் உள்ளனர்.

**கேள்வி:** மாறி வரும் காலகட்டத்தில் இந்த செரமிக் பதிப்புகள் நிலைத்திருக்குமா?

**பதில்:** நல்ல கேள்வி, ஆரம்பத்தில் தரைக்கு சீமேந்து மட்டுமே பூசப்பட்டது. பின் சீமேந்துடன் சிவப்பு சாயம் கலந்து பூசப்பட்டது. பின் டெராஸ்சோ, அதன் பின் டைல்ஸ், பின்பு கிரனைட், இப்பொழுது நாம் பெரும்பாலும் விநியோகம் செய்யும் போர்சிலேன் டைல்ஸ் பயன்படுத்தப்படுகிறது. டைல்ஸ் பதிப்பு மாறினாலும் நவீன கால வளர்ச்சிக்கு ஏற்ப உலகமெங்கும் அறிமுகமாகும் புதிய பொருட்... நம்நாட்டுக்கு அறிமுகம் செய்து வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** உங்கள் எதிர்கால விற்பனை முறையில் ஏதேனும் சிறந்த மாற்றங்கள் வருமா?
**பதில்:** ஆம் நாங்கள் இப்பொழுதே மாற்றங்களை ஏற்படுத்தி விட்டோம். எமது பொருட்களைப் பெற தூரப்பிரதேச மக்கள் கொழும்பு வரவேண்டும் என்பது அவசியமில்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எங்களது பொருட்களை மட்டுமே விநியோகம் செய்யும் ஏகவிநியோகஸ்தர்களை (Franchise) நியமித்துள்ளோம். தற்போது யாழ்ப்பாணம், சீதுவை, மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் நியமித்துள்ளதோடு, ஏனைய மாவட்டங்களுக்குத் திறமையான விநியோக ஸ்தர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

**கேள்வி:** உங்கள் முன்னேற்ற வாழ்வில் நீங்கள் நன்றி கூற நினைப்பது யாருக்கு?
**பதில்:** எனக்கு வழிகாட்டி, அன்று முதல் இன்று வரை என்னை பலப்படுத்தியவர் ரஞ்சனாஸ் குரூப் நிறுவனங்களின் தலைவரான தேசமான்ய துரைசாமி செட்டியார் அவர்களே. அவரைத் தொடர்ந்து அவரது மகன் திரு. விக்னேஸ்வரன் கட்டட நிர்மாண பிரிவினை வேறுபடுத்தி, அதை தலைமை தாங்கி வழிநடாத்தி, நவீன்செரமிக்கின் வளர்ச்சியை முன்னேற்றினார். இவர்களை நன்றியுடன் நினைவு கூற நான் கடமைப்பட்டுள்ளேன். எமது முன்னேற்றத்திற்கு வழிவகுத்த அன்பான வாடிக்கையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், கட்டட நிர்மாண வியலாளர்கள், எமது ஊழியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் என நிர்வாகம் நன்றி கூறும்.

**கேள்வி:** முன்னேறத் துடிக்கும் இன்றைய கால கட்ட இளைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?
**பதில்:** அயராத உழைப்பு. உங்கள் தொழிலில் நீங்கள் முழுமையாக ஈடுபடுங்கள். உங்கள் சிந்தனைகள் எந்நேரமும் தொழில் முன்னேற்றத்திலேயே இருக்க வேண்டும். பல தொழில் முறைகளில் சிந்தனையை அலைய விடாது. ஒரே துறையில் கவனம் செலுத்துங்கள். அந்தத் துறை சார்ந்தவர்களின் கருத்துக்களைக் கேளுங்கள், கலந்துரையாடுங்கள், நல்ல அட்வைஸ் பெறுங்கள். நிச்சயம் முன்னேற்றம் வரும்.

**கேள்வி:** வியாபாரத்திற்கு முதலீடு இல்லாதவர்கள் என்ன செய்வது? பணமிருந்தால் மட்டுமே முன்னேறி விடலாமா? இன்று பல புள்ளிகள் பண முதலீடுகள் நிறைய இருந்தும், முன்னேற்றம் இல்லாது, உள்ள பணத்தையும் நஷ்டப்படுத்தி இழந்து நிற்கிறார்களே. இவர்கள் விட்ட பிழை என்னவாயிருக்கும்?
**பதில்:** முதலீடு வியாபாரத்திற்கு அவசியம்தான். இல்லாதவர்கள் அதை வங்கி மூலம் அல்லது நலன் விரும்பிகளிடமிருந்து பெற்று ஆரம்பிக்கலாம். நல்ல முதலீடு இருந்தும் நிறைய பேர் அனுபவமில்லாத நிலையில், முயற்சிப்பதாலேயே தோல்வி காண்கின்றனர். இவர்களது வியாபார முறையில் வரவை விட முறையற்ற செலவுகள் அதிகம். அனுபவசாலிகளிடமிருந்து நல்ல ஆலோசனை பெறுங்கள். திட்டமிடுங்கள். திட்டமிட்டு செயற்பட்டால் வெற்றிகள் நம்மைத் தேடி வரும்.

**Srilanka Entrepreneur of the year – 2007**
Extra Large Category – National Merit Award & Provincial Bronze Award.
(Mr.V.Doraisamy,Naveen Ceramic (Pvt) Ltd.)
**Merit Award for Stall Presentation**
Annual Trade Exhibition – 2007
Organized by Sri Lanka Institute of Architects
**Most Innovative Stall – Award of Excellence**
Annual Trade Exhibition – 2008
Organized by SriLanka Institute of Architects
**Most Innovative Stall – Merit Award**
Annual Trade Exhibition – 2009
Organized by SriLanka Institute of Architects



ஆனந்தன்
நது சிகரம் வளரும்...



இம்மாத சிகரம் சிறப்பிதழில் நாம் கண்நோக்குவது நவீன் செரமிக் (பிரைவேட்) லிமிட்டட் ஸ்தாபனத்தின் தலைவர் திரு. சி. தயாளன் அவர்கள். கண்டியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கண்டி. இந்து சீனியர் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற பின்னர், கொழும்பில் தனது முதல் தொழிலை 1981 ஆம் ஆண்டு ரஞ்சனாஸ் குரூப் நிறுவனங்களின் தலைவரான தேசமான்ய துரைசாமி செட்டியார் அவர்களின் உதவியாளராக ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து, வியாபாரத் துறையில் நாமும் பிரவேசித்து, ஒரு உயர் நிலையினை அடைய வேண்டும் என்ற இவரது தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே, கோல்டன் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தை 1987ம் ஆண்டு ஆரம்பிக்க வழிவகுத்தது.

அன்று தொடங்கிய அவரது வெற்றிப்பயணம் படிப்படியாக விருத்தியடைந்தது. 1989ம் ஆண்டு கோல்டன் செரமிக் நிறுவனமும் ஆரம்பிக்கப்பட்டது. 1991 இல் தமது வாழ்க்கைத் துணைவியாக கோகிலவாணியை மணம் புரிந்து இல்லற வாழ்வை ஆரம்பித்தார். இல்லறம் அவருக்கு நல்லறமாக அமைந்திட்டதால் மேலும் அவரது வியாபார வெற்றிகள் பிரகாசிக்க ஆரம்பித்தன. 1995ம் ஆண்டு நவீன் செரமிக் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தை ஆரம்பித்தார். நவீன் செரமிக் நிறுவனத்தின் பாரிய வளர்ச்சி இன்று பல கிளை நிறுவனங்களை நாவல, பத்தரமுல்ல, கொட்டாஞ்சேனை, கிரான்பாஸ் போன்ற பகுதிகளில் பிரமாண்டமாக நிறுவி, துரிதமாக வளர்ச்சி யடைந்துள்ளது. இவர்களது நிறுவனப் பொருட்களை மட்டுமே விநியோகம் செய்யும் ஏக விநியோகஸ்தர்கள் நீர்கொழும்பு, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் நிறுவப் பட்டுளதுடன், நாடளாவிய ரீதியில் 100 விநியோகஸ்தர்களையும் உருவாக்கி செரமிக் வியாபாரத்துறையில் தற்போது உயர்மட்டத்தில் உள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான திரு. சி. தயாளன் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், 2005 ஆம் ஆண்டு முதல் Tiles & Sanitaryware Association இன் தலைவராகவும் திகழ்கின்றார். Lions Club of Colombo Capital City இல் உறுப்பினரான இவர் தற்போது இக்கழகத்தின் கணக்கு நிர்வாகியாகவும் பதவி வகிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study MBBS at Yerevan State Medical University in Armenia (YSMU) Recognized by (SLMC, WHO and EU)

| | | |
|---|---|---|
| **Qualification** | : | **A/L Biology** |
| **Medium** | : | **English** |
| **Duration** | : | **06 years** |
| **University charges** | : | **US$ 3000 + US$ 500 ( with accommodation )** |

**Also presently conducting a MEDICAL ENGLISH class**

## Study at Boston Business School in Singapore

Study is 6 month with 8 month work experience at a Fivestar hotel

The only qualification needed is your G.C.E. Ordinary Level

(Contact for more details)

## Work and study at College of Tourism and Hotel Management, Cyprus

(Earn up to 500 euro per month and many more)

## Study ENGINEERING at State Engineering University of Armenia



## Study at PSNA college of Engineering and Technology in INDIA

Entry requirements: Minimum 03 passes in Advance level Science or Maths

Also we provide student placement services to Universities and Colleges in **Canada, Malaysia, Singapore, UK, Newzealand and India**

**Sponsorship will be provided by our company**
**Contact us for**

**further information**

**HANIYA EDUCATION**
NO: 22, INITIUM ROAD,
DEHIWALA
HOTLINE: 0770 531 050
TEL: 0112 728 489
WEBSITE: www.haniyaeu.com

HANIYA EDUCATION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையர் தினம்



அம்மா...இச்சொல்லில் புதைந்துள்ள அர்த்தங் களும், தொனிகளும் ஆயிர மாயிரம்... அம்மாக்களின் மேன்மையை எடுத்துரைக்காத எந்த மனிதருமே உலகத்தில் இருப்பாரெனக் கூறமுடியாது. உலக அளவில் தாய்மையைப் போற்றும் வகையில் கொண்டாடப்படும் அன்னையர் தினம் - (Mother's Day) - ஏனைய சர்வதேச தினங்களைப் போல ஒரு குறித்த நாளில் கொண்டாடப்படுவதில்லை. பொதுவாக மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறன்று உலகில் அநேக நாடுகள் கொண்டாடினாலுங்கூட வேறு சில நாடுகள் அதற்கு முன்போ அல்லது பின்போ கொண்டாடுகின்றன. "தாயிற்சிறந்த கோவிலுமில்லை....." என்ற வரிகள் தாய்மையின் புனிதத்துவம், தாய்மையின் பெருமை, தாய்மையின் தியாகம் போன்றவற்றை எடுத்துக்கூறத்தக்க வரிகளாகும். இந்த உலகில் தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே இல்லை. ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக வீட்டிலுள்ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டியாக, அனுபவங்களின் அரவணைப்பில் வழி நடத்திச்செல்லும் ஆசானாக இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் "அன்னை" என்ற பாத்திரம்தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. தாய்மை என்பது ஓர் உன்னதமான உணர்வு. அத்தகைய தாயைப் போற்றவே மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறு அன்னையர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. "அன்னையர் தினம் " Mother's Day உலகெங்கும் கொண்டாடக் காரண-மாக இருந்த பின்னணி பற்றி நாம் ஒரு சிறிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அன்னையர்களுக்கும் மரியாதை செலுத்தும் சம்பிரதாயம் புராதன காலத்திலே தொடங்கி விட்டதாக வரலாற்றுச் சான்றுகள் பகருகின்றன. பண்டைய கால மனிதர்களால் அன்னையர் புராணங்கள் கதையாக வழங்கப்பட்டு வந்தன. இதில் முக்கியமாக பெண் - கடவுளான சைபீல் என்ற கடவுள் வணங்கப்பட்டாள். இந்தப் பெண் தெய்வமே எல்லாக் கடவுளுக்கும் முழு முதல் தாய்க் கடவுளாக அம்மக்களினால் வணங்கப்பட்டுள்ளது. வருடத்திற்கு ஒரு முறை இந்த முழு முதல் தாய்க் கடவுளுக்கு பிரிஜியா மக்களால் விழா எடுக்கப்பட்டு வந்தது. இந்த விழாவே அன்னையர்களை மரியாதை செய்யும் முதல் விழா கொண்டாட்டமாகக் கருதப்படுகிறது. வசந்த காலத்தின் துவக்கத்தை கிரேக்கர்கள் பல வகைகளில் கொண்டாடினர். அதில் தாயத் தெய்வத்தை வணங்குவதும் ஒன்றாகும். கிரேக்கர்கள் தெய்வமாக வழிபட்டு வந்த க்ரோனஸின் மனைவி ரேஹாவைத்தான் அவர்கள் தாயத் தெய்வமாக வழிபட்டனர். ரோமர்களும் வசந்த கால கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சைபெலி என்ற பெண் தெய்வத்தைத் தாயாகக் கருதி வழிபட்டனர். இந்த வழிபாடு என்பது கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு, வீர சாகசங்கள் என பல்வேறு விஷயங்கள் இடம்பெறுவதாக அமைந்தது. ரோமானியர்கள் தங்களது தாய்க்கடவுளுக்கு பாலடைன் மலையில் கோயில் ஒன்றை எழுப்பினர். ஒவ்வொரு வருடமும் மார்ச் 15ம் தேதி மூன்று நாள் விழா நடத்தினர். விழாவின் போது இக்கடவுளுக்குப் பலவிதமான படையல்களும் செய்யப்பட்டன.

கிறிஸ்தவத்தின் வருகைக்கு பின்பு இந்தக் கொண்டாட்டம் மாதா திருக்கோயிலுக்கு மரியாதை செய்வதாக மாறியது. இயேசுபிரான் பாலையில் கழித்த 40 நாளை நோன்பு இருந்து கொண்டாடும் விழா- நாட்களில் நான்காவது ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் தங்கள் ஞானஸ்தானம் செய்விக்கப்பட்ட திருக்கோயில்களுக்கு பரிசுகள் கொண்டு வரும் விதமாக அன்னையர் தினம் கொண்டாடப்பட்டதாக கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ~~சமையல்~~ உணவுத் தகவல்கள்

நம் உடல் பாதுகாப்பாக இயங்கப் பத்து சூப்பர் உணவுகள் உள்ளன. காற்று, நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றை மிகச்சுத்தமான மனிதர் கூடத் தடுக்க முடியாது. நாம் சாப்பிடும் முக்கியமான உணவு வகைகள், நம் உடலில் சேரும் இத்தகைய நோய் நுண்மங்களை எளிதில் தடுத்து அழித்துவிடும். நோய் பரவுவதைத் தடுக்கும் அந்தப் பத்து சூப்பர் உணவுகள் இதோ...



### வெள்ளைப் பூண்டு:

பண்டைய எகிப்திலும் பாபிலோனியாவிலும் அற்புதங்களை விளைவித்துக் குணமாக்கிய மண்ணடித் தாவரம் இது. கிரேக்கத் தடகள வீரர்கள் விரைந்து ஓட ஊக்கம் தரும் மருந்தாக வெள்ளைப் பூண்டைக் கைகளில் அழுத்தித் தடவிக் கைகளைக் கழுவினார்கள். இதனால் நோய் நுண்மங்கள் அழிந்தன. குடலில் உள்ள புழுக்களிலிருந்து மற்றும் தலைவலி முதல் புற்றுநோய் வரை பல நோய்களையும் குணமாக்க வெள்ளைப் பூண்டு பயன்படுத்தப்படுகிறது. அறிவியல் முடிவுகளால் கூட வெள்ளைப் பூண்டின் பெருமையை மங்கச் செய்ய முடியவில்லை. உடலில் நன்மை செய்யக்கூடிய கொலாஸ்டிரல் உருவாக பூண்டின் பங்கு மகத்தானது.



### வெங்காயம்:

வெள்ளைப் பூண்டுடன் சேர்ந்து வல்லமை மிக்க, புகழ்மிக்க மருந்தாக வெங்காயம் செயல்பட்டு வருகிறது. ஜலதோஷத்தை ஏற்படுத்தும், நச்சு நுண்மங்களையும், புற்று நோய்களையும், இதய நோய்களையும் தடுத்து நிறுத்துகிறது. நோய்த் தொற்றைத் தடுத்து உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. வெங்காயத்தில் உள்ள அலிலின் என்ற இராசயனப் பொருள்தான் பாக்டீரியாக்கள், நச்சு நுண்மங்கள், காளான் போன்றவை உடலில் சேராமல் தடுக்கின்றன. இத்துடன் புற்றுநோய்க் கட்டிகள் வளராமலும் தடுக்கின்றன.



### கரட்:

நோய் எதிர்ப்புச் சக்தி வேலிகள் நன்கு உறுதிப்பட காரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் உதவுகிறது. குறிப்பாக நம் உடல் தோலிலும், சளிச் சவ்விலும் நோய் எதிர்ப்புச் சுருள்கள் நன்கு செயற்படும்படி தூண்டிக்கொண்டே இருப்பது கரட்தான்.



### ஆரஞ்சு:

விற்றமின் சி ஒரு முகப்படுத்தப்பட்டுச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பழத்தில் இன்டர்பெரான் என்ற இராசயனத் தாதுக்களை அதிகம் உற்பத்தி செய்வது விற்றமின் சி. காற்று மற்றும் நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றுக் கிருமிகளை இந்த இன்டர்பெரான்கள் எதிர்த்துப் போராடி உடலில் அவை சேராமல் அழிக்கின்றன. ஆரஞ்சு கிடைக்காத போது எலுமிச்சம்பழச் சாறு அருந்தலாம்.



### பருப்பு வகைகள்:

பாதாம் பருப்பு, வேர்க்கடலை போன்ற கொட்டை வகைகளில் உள்ள விற்றமின் ஈ (E) , வெள்ளை இரத்த அணுக்கள் சிறப்பாகச் செயற்படத் தூண்டிவிடுகின்றன. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது.



### கோதுமை ரொட்டி:

நரம்பு மண்டலமும், மூளையும் நன்கு செயற்படவும் புதிய செல்களின் உற்பத்திக்கு உதவும் மண்ணீரலும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். தைமஸ் சுரப்பியும் விரைந்து செயற்பட ப்ரௌன் (கோதுமை) ரொட்டியில் உள்ள பைரிடாக்ஸின் (B4) என்ற விற்றமின் உதவுகிறது. இத்துடன் கீரையையும், முட்டையையும் தவறாமல் சேர்த்துக்கொள்ள வேண்டும்.



### இறால், மீன் மற்றும் நண்டு:

அழிந்து போன செல்களால் நோயும், நோய்த்தொற்றும் ஏற்படாமல் தடுப்பதில் இவற்றில் உள்ள துத்தநாக உப்பு உதவுகிறது. எனவே, வாரம் ஒரு நாள் இவற்றில் ஒன்றைச் சோத்துச் சாப்பிட்டு வரவும்.



### தேநீர்:

தேநீரில் உள்ள மக்னீசியம் உப்பு நோய் எதிர்ப்புச் செல்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதில் ஒரு நாட்டின் இராணுவம் போன்று செயற்படுகிறது. சூடான தேநீர் ஒரு கப் அருந்துவதால் நோய்த் தொற்றைத் தடுத்து விடலாம்.



### பாலாடைக்கட்டி:

சீஸ் உட்பட பால் சம்பந்தப்பட்ட பொருட்களில் உள்ள கல்சியம், மக்னீசியம் உப்புடன் சேர்ந்து கொண்டு உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை அமைப்பு கருதி தவறாமல் ஆற்றலுடன் செயற்பட உதவுகிறது.



### முட்டைக்கோஸ்:

குடல் புண்கள் ஆறு மடங்கு வேகத்தில் குணம் பெற முட்டைக் கோஸில் உள்ள குளுட்டோமைன் என்ற அமிலம் உதவுகிறது. உணவின் மூலம் உள்ளே சென்றுள்ள நோய்த்தொற்று நுண்மங்கள் முட்டைக்கோஸால் உடனே அகற்றப்படுகின்றன. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. முட்டைக் கோஸுக்குப் புற்று நோயைத் தடுக்கும் ஆற்றலும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக் கடி



என்னங்க, உங்க மனைவி வந்ததும் மாத்திரை சாப்பிடுறீங்களே...ஏன்?
தலைவலி வந்தா மாத்திரை சாப்பிடணும்னு டாக்டர் சொல்லியிருக்காரே.

"முதலிரவு அறைக்குள்ள நுழைந்ததும் லைட்டை அணைத்து, கதவை மூடுறாங்க ஏன் தெரியுமா?" **ஏன்?**
"மாப்பிள்ளை பயந்து ஓடிவிடக் கூடாதுன்னுதான்."

**கணவன்** :- ஏன்டி நான் திடீரென இறந்தால் நீ என்ன செய்வாய்?
**மனைவி** :- நான் என்னுடைய தங்கச்சி கூட இருந்திடுவேங்க
ஆமா! அப்ப நான் திடீரென இறந்தால் நீங்க என்ன செய்வீங்க
**கணவன்** :- நானும் உன்ன போல உன் தங்கச்சி கூட இருந்திடுவேன்.

அம்மா அடிச்சா வலிக்காது,
அப்பா அடிச்சா வலிக்காது,
அண்ணன் அடிச்சா வலிக்காது,
தம்பி அடிச்சா வலிக்காது,
ஏன்

ஆமா, சைட் அடிச்சா வலிக்காதில்ல...
எப்புடி!



மனைவி :-
உப்புமா ஓருதரம், உப்புமா இரண்டுதரம், உப்புமா மூன்று தரம்
கணவன் :- என்னடி சத்தம் போடுற,
மனைவி :-
இல்லீங்க நீங்க வாங்கி தந்த சமையல் புத்தகத்தில உப்புமாவ கிண்டி இறக்கும் போது ஏலம் போட்டு இறக்க சொல்லி இருக்கு.

எங்க வீட்டு நாயைக் காணோம் சார்...
அடையாளம் சொல்லுங்க...
அது குரைக்கும் பொழுது, என்னோட மாமியார் மாதிரியே இருக்கும்.......!"

**கோபி:-** உன்ன கடிச்சிட்டு அந்த நுளம்பு போகுது அத ஏண்டா அடிக்கல?
**மது:-** ரத்த பாசம்டா
**கோபி:-** என்னடா சொல்ற?
**மது:-** ஆமா, என்ன கடிச்ச பிறகு அது ஒடம்புல என் ரத்தம் தானே ஓடும். அப்ப அது என் சொந்தம்ல..., ரத்த பாசம்ல்ல...
அதனாலதான் அடிக்கவில்லை.

**பார்த்திபன்:** வாழைப் பழம் எவ்வளவு?
**வடிவேலு:** ஒண்ணு 1 ரூபா
**பார்த்திபன்:** 60 பைசாக்கு வராதா?
**வடிவேலு:** 60 பைசாக்கு தோல்தான் வரும்.
**பார்த்திபன்:** அப்படின்னா இந்தா 40 பைசா, தோல வச்சுக்கிட்டு பழத்த மட்டும் குடு

**வாத்தியார்:** தென்னை மரத்தில இருந்து 6 இலையும், பனை மரத்தில் இருந்து 6 இலையும், கீழே விழுது, ரெண்டையும் கூட்டினால் என்ன வரும்?
**மாணவன்** : குப்பை தான் சார்.

## தத்துவக் கடி!

மீன் பிடிக்கரவனை மீனவன்னு சொல்ல முடியும், ஆனா மான் பிடிக்கரவனை மாணவன்னு சொல்ல முடியாது

புள்ளிமானுக்கு உடம்பெல்லாம் புள்ளியிருக்கும், ஆனா கன்னுக்குட்டிக்கு உடம்பெல்லாம் கண்ணு இருக்காது.

என்னதான் பெரிய டான்ஸ் மாஸ்டரா இருந்தாலும், அவருடைய சாவுக்கு அவரால டான்ஸ் ஆட முடியாது.

ஆயிரம் ரூபா கொடுத்து ஜீன்ஸ் வாங்கினாலும், அதுல இருக்கர 10 ரூபா சிப்புதான் உங்க மானத்தைக் காப்பாத்தும்.

**ஆசிரியர் :**
உங்க பையன் ஆங்கிலத்தில படு **வீக்கா** இருக்கான் சார்.
**பையனின் தந்தை :**
தமிழிலே எப்படி இருக்கான்னு சொல்லுங்க சார்.
**ஆசிரியர் :**
தங்கள் புதல்வன் ஆங்கில பாடத்தில் மிகவும் வலு விழந்து இருக்கின்றான்.

நாட்டாமை: என்றா பசுபதி?
பசுபதி: 1 2 3 4 5 6 7 8 9 10 11
நாட்டாமை: என்றா பசுபதி?
பசுபதி: அதான் என்றோம்ல.

**அமெரிக்காகாரன்** - நாங்கதான் முதல்ல நிலவுல கால் வெச்சோம்

**ஆஸ்திரேலியாக்காரன்** - நாங்கதான் முதல்ல வீனஸ் க்கு போனோம்

**இந்தியா** - நாங்கதான் முதல்ல சூரியன்ல காலை வெச்சோம்.

**அமெரிக்கா** - டேய் பொய் சொல்லாதீங்கடா சூரியன்ல கால் வெச்சா எரிஞ்சு போயிடுவோம்

**இந்தியாக்காரன்** -
கொய்யாலே..நாங்க போனது ராத்திரியில்...




**Kadi Ananth**
**# 48/3 B,1/1, Dharmarama Road,**
**Colombo-06, Srilanka.**
**E: info@globalexps.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Global Express ன்

## இம்மாத மாங்கல்ய இதழுக்கான சிறப்பு நேர்காணல்

எந்தவொரு விடயத்திலும் தீராத பற்றிருந்தால் அதில் முன்னுதாரணமாக திகழலாம் என்பது என்னுடைய நம்பிக்கை. என்னுடைய ஆத்ம திருப்திக்காக வேலை செய்யத் தொடங்கி இன்று பல மாணவர்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்துவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஏதோவொரு மூலையில் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் பிரபல்யமான பிரியா சங்கர் என்ற பெயர் இன்று அழகை விரும்புகின்ற அனைவர் மத்தியிலும் நீங்காத இடம்பிடித்திருப்பது எனக்கு மனநிறைவைத் தருகிறது.

சிறுக சிறுக நான் எடுத்து வைத்த காலடிகளை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. என்னுடை ஆரம்ப கல்வியை கொழும்பு 7இல் அமைந்துள்ள புனித பிரிஜ்ஜெட் கொன்வன்ட் இல் ஆரம்பித்தேன். அதன் பின்னர் என்னுடைய உயர் கல்வியினை இந்தியாவில் தொடர்ந்தேன்.

அதன்பின்னர் என்னுடைய பொழுதுபோக்கிற்காக 2002ஆம் ஆண்டு என்னுடைய வீட்டிலேயே சிறியளவில் சலூன் ஒன்றை ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் என்னுடைய வாடிக்கையாளர்களாக நண்பர்களும் உறவினர்களுமே இருந்தார்கள். அதன்பின்னர் என்னுடைய வேலையின் திருப்தியை உணர்ந்தவர்கள் வாய்வழியாக சொல்வதை கேட்டு வாடிக்கையாளர்கள் அதிகரிக்கத் தொடங்கினர். சாதாரணமாக என்னுடைய பொழுதுபோக்கிற்காக வீட்டின் கராச்சின் ஆரம்பித்த சலூனை விஸ்தரிக்கும் ஆசை அப்பொழுதுதான் தோன்றியது.



என்னை நாடி வந்தவர்களை திருப்தியாக செல்ல வைப்பது என்னுடைய பாணி. அவர்களின் திரும்பிதான் என்னுடைய திருப்தி. செய்கின்ற வேலையில் தெளிவாக இருப்பேன். நான் செய்கின்ற தொழில்மீது எனக்கிருந்த பற்றினால்தான் இன்று மூன்று விசாலமான அழகு சிகிச்சை நிலையங்களை நடத்தக்கூடியதாக உயர்ந்திருக்கிறேன். கொட்டாஞ்சேனையில் ஜினானந்த மாவத்தையில் ஒன்றும் வாசல வீதியில் ஓர் அழகு சிகிச்சை நிலையமும் வெள்ளவத்தை ஹொலிங்வூட் பிளேஸில் மற்றொரு விசாலமான அழகு சிகிச்சை நிலையத்தினையும் நான் நடத்திவருகிறேன்.

எங்களுடைய இந்த அழகு சிகிச்சை நிலையங்கள் சர்வதேச அங்கிகாரம் பெற்ற City and Guild தரச் சான்றிதழைப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையங்களிலே தரமான அழகுக்கலை கற்கை நெறிகளையும் சிகிச்சைகளையும் வழங்கி வருகிறோம். அழகுக்கலை, சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம் போன்ற சகல தேவைகளையும் இந்த நிலையங்களிலே பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக கொட்டாஞ்சேனை வாசல வீதியில் அமைந்துள்ள Priyashanker Institute இல் City and Guild தரச் சான்றிதழ் பெற்ற கற்கை நெறிகளை தொடரக்கூடிய வசதிகளை நாங்கள் ஏற்படுத்தித் தருகிறோம். இங்கு கற்பிக்கின்ற அழகுக்கலை நிபுணர்கள் அனைவரும் மிகவும் தகுதியுடையவர்கள், அனுபவசாலிகள். தங்களின் தகுதிக்கு ஏற்றாற்போல் அடிப்படையிலிருந்து அழகுக்கலையினை கற்க முடியும். சிகையலங்காரம், அழகு சிகிச்சை, மணப்பெண் அலங்காரம் என எத்துறையில் நீங்கள் தேர்ச்சிபெற விரும்புகிறீர்களோ அத்துறையில் உங்களை தயார்படுத்தக்கூடிய தரமான அழகுக்கலை நிபுணர்கள் இங்கு கடமைபுரிகிறார்கள்.

இவ்வளவு பெரிய அளவில் அழகுக்கலை சிகிச்சை நிலையங்களை நடாத்திவருகின்ற நான் உலகளாவிய ரீதியில் அங்கீகரம்பெற்ற பல நிறுவனங்களுடன் கைகோர்த்து செயற்படுகின்றேன். அமெரிக்காவில் இருக்கின்ற **Carlton Institute of Hair and Beauty** இல் அங்கத்தவராக இருக்கிறேன். இங்கிலாந்தின் **City and Guilds University** இல் அங்கத்தவராக இருக்கிறேன். அவுஸ்திரேலியாவின் **AVANTI NAIL Technology Institute** இல் நகம் பற்றிய தொழில் நுட்பங்களை அறிந்து வைத்திருக்கிறேன். அதேபோல் இந்தியாவின் **MAHA and SHAHANAZ Beauty Academy** இல் **Beauty therapy** சம்பந்தமாக கற்றிருக்கிறேன். அவுஸ்திரேலியாவின் **CUTERA academy** இல் **Laser treatment** கற்றிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கணக்கியல் துறையிலும் சிறிது அனுபவம் இருக்கிறது. **CIMA, ICSA** என்பவற்றின் ஆரம்பத்தினை கற்றிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் பரதநாட்டியத்தினையும் முறைப்படி கற்றிருக்கிறேன். கர்நாடக சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றுள்ளதோடு வீணையினையும் வாசிப்பேன். அடிப்படையில் கலையினை அதிகம் நேசிப்பதனால் என்னுடைய துறையினை விருத்தி செய்து கொள்வதற்கு மிகவும் இலகுவாக இருக்கின்றது.

என்னுடைய திருமணத்தின் பின்னர் என் கணவர் என்னிடம் ஏதாவது தொழில் செய்ய விரும்பினால் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க நான் எனக்குப் பிடித்த அழகுக் கலையினை தெரிவுசெய்து கொண்டேன். இன்று என் கணவரின் பூரண ஒத்துழைப்புடன் நான் தெரிவுசெய்த அழகுக்கலை தொழிலில் உயரிய நிலையினை அடைந்திருப்பது மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

**Global Expres ற்காக அழகுக்கலை நிபுணர் திருமதி பிரியாசங்கர்**

நன்றி !

நேர்காணல் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளியாக்கும் "கோபம்"



கோபம் ஏன் வருகிறது என்பதை புரிந்து கொண்டாலே அதிலிருந்து மீண்டு விடலாம். கோபத்திற்குக் காரணம் மன அழுத்தம். இன்றைய நெருக்கடியான வாழ்க்கைச் சூழலில் யார்தான் மனஅழுத்தம் இல்லாமல் இருக்கிறார்கள்? காலமும், சூழலும் கோபத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது. இயந்திர கதியில் இயங்கும் நமக்கு ஒரே நேரத்தில் பல விடயங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. அவற்றைக் குறித்த நேரத்தில் செய்ய முடியாமல் போகும்போது நமக்குள் மன அழுத்தம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதனால், மனதில் வெறுப்புத் தோன்றுகிறது. அந்த வெறுப்பே கோபமாக வெளிப்படுகிறது. சந்தோசத்தைக் கெடுக்கிறது. எனவே கோபத்தை அடக்கி கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டியது சந்தோச வாழ்க்கைக்கான முக்கியத் தேவையாகிறது.

நம்மை நாமே வெறுக்க நமக்குள் எழும் கோபமே போதுமானது. நீங்கள் எந்த ஒரு காரியத்தையும் சீரியசாக" எடுத்துக் கொள்ளாமல் சாதாரணமாக எடுத்துக் கொண்டு பரபரப்பின்றி அமைதியாக அணுகிப் பாருங்கள். மனஅழுத்தம் நெருங்காது. மொத்த வேலைகளையும் ஒரே நேரத்தில் போட்டு குழப்பிக் கொண்டிராமல் முக்கியமானதை முதலிலும், முக்கியமல்லாதவற்றை சாவகாசமாகவும் செய்யுங்கள். இதனால் மன உளைச்சலைத் தவிர்த்துவிட முடியும். சில வேலைகள் நீண்டகாலம் இழுத்துக் கொண்டு போகும். அந்தத் தாமதம் சில நேரங்களில் எரிச்சலைக் கிளப்பும். அப்போது உங்களால் கோபப்படாமல் இருக்க முடியாதுதான். எனினும் கோபம் என்பது மற்ற உணர்வுகளைப் போன்று சாதாரண உணர்வுதான் என்று புரிந்து கொண்டு அந்தத் கோபத்தினையும் பக்குவமாக வெளிப்படுத்துவது புத்திசாலித்தனம்.

நீங்கள் எதையும் குறித்த நேரத்தில் செய்யாமல் சோம்பல் மிகுந்தவராக இருந்தால் வழக்கமாகச் செய்ய வேண்டிய காரியங்களை உங்களால் நிறைவேற்ற முடியாது. அது உங்களுக்கு மனஉளைச்சலையும் வெறுப்பையும் ஏற்படுத்தும். அதனால் முக்கியமான வேலைகளை முறையாகச் செய்யாமல் கடைசி நேரத்தில் அவசர அவசரமாகச் செய்து பிரச்சினைக்குள்ளாவீர்கள். "வேலைக்குக் கிளம்பும்போது கடைசி பஸ், ரெயிலை தவறவிட்டுவிட்டால் மனஅழுத்தம் ஏற்படுகிறதா? அலுவலகத்தில் உயர் அதிகாரியோ, உடன் பணிபுரிபவரோ உங்களைக் குறை சொன்னால் உணர்ச்சி வசப்படுகிறீர்களா? உறவினர்கள், நண்பர்கள் உதாசீனப்படுத்துவதாக நினைத்துக் கலங்குகிறீர்களா? அவர்களுக்கு எப்படியெல்லாம் உதவினேன் என்று உள்ளக் குமுறல் கொள்கிறர்களா? இப்படி நீங்கள் உணர்ச்சி வசப்பட்டால் உங்களுக்கு எளிதாகக் கோபம் வந்துவிடும்.

கோபம் ஏற்படுவதற்கான உள்ளார்ந்த அடிப்படைக் காரணங்களை நீங்கள் புரிந்து கொண்டால் அவற்றிலிருந்து உங்களை எளிதாக விடுவித்துக் கொள்ள முடியும். கோபம் ஏற்படும் சூழ்நிலைகளைத் தெரிந்து அவற்றிலிருந்து விலகியிருக்கச் சொல்லும் உங்கள் அறிவுதான் உங்களது கோபத்தினை அடக்குவதற்கான முதற்படியாகும்.

கோபப்படும்போது உங்கள் உடலில் ஏற்படும் அங்க அசைவுகளைக் கவனியுங்கள். நரம்புகள் முறுக்கேறுதல், அதிகப்படியான இதயத்துடிப்பு, வியர்வை வழிந்தோடல் ஆகியவற்றினைக் கோபப்படும்போது உணரலாம். இத்தகைய அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும் போதே நீங்கள் கோபத்தினை அடக்க முயற்சி செய்வது நல்லது.

கோபம் ஏற்படும் இம் மாதிரியான சூழ்நிலைகளில் இருந்து விலகி நீங்கள் வேறு இடத்திற்கு சிறிது நேரம் கால்நடையாக உலாவச் செல்லலாம். உங்கள் நண்பர்களுள் ஒருவரைச் சந்தித்து சிறிது நேரம் அரட்டையடிக்கலாம். அல்லது நாம் இனிமேல் கோபப்படவே கூடாது என்று உங்களுக்கு ள்ளாகவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். கோபம் தான் சிறைகளை நிரப்புகிறது. கோபம் தான் நல்ல மனிதர்களையும் குற்றவாளிகளாக்குகிறது என்பதை உணருங்கள். எனவே கோபத்தை விட்டொழித்து சாந்தமாக வாழ முயற்சி செய்யுங்கள், உலகம் உங்கள் காலடியில் சுழலும். வாழ்க்கை தித்திப்பாகும்.

ஹலோ, நான் வர்த்தமுல்ல வாலிபர்சங்க தலைவர் கைப்புள்ள பேசுறன். யாரு இந்த மாதிரி கோபத்தை பத்தி அதிகமா அட்வைஸ் பண்றது?

நான் தான்

வேணாம் எனக்கு கோபம் வராது...

வந்தா என்னடா பண்ணுவ

அதான் வராதுன்னு சொல்லிறேன்ல்ல....



source: net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vettri FM யின் பகல் பந்தி

வாரநாட்களில் மதிய நேர செய்தியறிக்கையைத் தொடர்ந்து உங்கள் இதயத்தின் நாதம் வெற்றி எப் எம் மில் விமல் மற்றும் தினேஷா தொகுத்து வழங்கும் பகல் பந்தி. சுப்பர் ஹிட் பாடல்களோடு வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான இரண்டு மணித்தியால சுவையான நிகழ்ச்சி.

SMS, ONLINE, தபால் அட்டை, தொலைபேசி மற்றும் Fax மூலமாக கிடைக்கப் பெறுகின்ற வாழ்த்துக்களை இணைத்து கொள்வதற்கான நேரம் வெற்றியின் பகல்பந்தி.

Hot-line
0112304343
SMS
0718996996
Fax
0112 302229

சரோஜா சமையல், கண்ணாடி போன்ற அம்சங்களால் நிகழ்ச்சி மேலும் மெருகூட்டப்படுகின்றது. நகைச்சுவை கலந்த சுவையான புதுவகைச் சமையல் குறிப்புகளோடு கற்பனைக் கதாபாத்திரமாக வலம் வருகின்றார். "சரோஜா அக்கா"

நேரம் - நண்பகல்
12 மணி தொடக்கம்
2 மணிவரை

பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், சமுதாயத்தில் நாங்கள் எதிர்நோக்குகின்ற பொதுப் பிரச்சினைகளையும் பிம்பமாக எடுத்து காட்டுவதே கண்ணாடி.

---

வெற்றியின் எம்மால் முடியும்

எமது **GLOBAL EXPRESS** ன் புதிய முயற்சியான **உதவும் கரங்கள்** செயற் திட்டத்தின் கீழ் எமது மாதாந்த இலவச சஞ்சிகையான GLOBAL EXPRESS னுடைய 12 மாத இதழ்களையும் மாதம் தவறாமல் உங்கள் இல்லங்களில் பெற்றுக் கொள்ள எமது **வெற்றி F.M. யின் எம்மால் முடியும் திட்டத்தில்** இணைந்து கொள்ளுங்கள்.

*"எங்கள் கரங்களால் நாமே எமக்கு உதவுவோம். எம்மை உயர்த்துவோம்" என்ற தொனியின் மூலம் பல சமூக சேவைகள், சமூகத்தில் கஷ்டப்படுவோர், ஏழ்மையில் தவித்து தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதோர், தங்கள் குறைகளை யாரிடம் முறையிடுவது என்று தவிப்போர் என்ற வரையரைக்குள் உட்பட்டவர்களுக்காகவே இவ் எம்மால் முடியும் திட்டம்.*

global express
we strive for your success!

## நீங்களும் எம்மோடு இணையத் தயாரா?

பக்கம் 47'ல் உள்ள கூப்பனை நிரப்பி அனுப்புங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி
**M/s GLOBAL EXPRESS**
**48/3-1/1, DHARMARAMA ROAD,**
**COLOMBO -06, Sri Lanka. T.P. : 0112556774-7**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

global express
*we strive for your success!*

# இலவசமானது...
# தரமானது...
# வாசிக்க இனிமையானது....

**1st Issue**




**2nd Issue**




**3rd Issue**




**உங்கள் விளம்பரங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள தொடர்பு கொள்ளவும்**

**48/3B, 1/1, Dharmarama Road,**
**Colombo-06. Sri Lanka.**
**T.P : 0112 556 777**

**எமது Global Express பற்றிய உங்கள் கருத்துக்களையும் விமர்சனங்களையும் ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்**

| | |
|---|---|
| Centhu | 0777 384 462 |
| Nihmath | 0777 384 472 |
| Tharshika | 0777 384 473 |
| Keetha | 0112 556 774 |

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

தொலைபேசி ..............................

மின்னஞ்சல் ..............................

எம்மால் முடியும்

கேள்விக்கான பதில் ..............................

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

தொலைபேசி ..............................

LBN

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Colombo Municipal Council | - 2693348, 2691849 |
| Police Special Operations | - 2433333, 2421111 |
| Police Assistant Unit | - 2432014 |
| Crime Inquiry Head Quarters | - 2693173 |
| Department of Crime Research | - 2422176 |
| National Narcotic Administrating Unit | - 2423829, 2430703 |
| Accident Emergency Service | - 2691111 |
| Bomb Squad Unit | - 2434251, 2434615 |
| Fire Brigade & Ambulance | - 2422222 |
| Electricity Accidents | - 2431139, 2431140 |
| Post Office | - 2326203 |
| Flight into | - 019733 - 5555 |
| Air port | - 2252861/7 |
| (Genaral) | - 2252861 / 7 |

### EMERGENCY PHONE NUMBERS FOR MEDICAL SERVICES

| | |
|---|---|
| Colombo General Hospital | - 2691111, 698651 |
| Central Blood Bank | - 2695728, 692317 |
| Red Cross Society | - 2691095, 694487 |
| S.N Raymond Ambulance Service | - 2693737 |
| St. John's Ambulance Service | - 2433576 |

### EMERGENCY PHONE NUMBERS FOR TRAVEL SERVICES

| | |
|---|---|
| Bus Transport Enquiry (Pettah/ Colombo) | - 2328081 |
| SriLankan Airlines | - +94 19733 5555 |
| Department of Immigration and Emigration | - 2508022 |
| | - 5329000 |
| | - 5329316 / 20 / 21 / 23 |

### COLOMBO PRIVATE HOSPITALS

| | |
|---|---|
| Nawaloka Hospital (Pvt) Ltd | 011 -2544444 |
| Asiri Hospital | 011 - 2500608 |
| The Central Hospital Ltd | 011 - 4666000 |
| Oasis Private General Hospital | 011 - 2369113 |
| Lanka Hospital | 011 - 2530000 |
| Royal Hospital (Pvt) Ltd | 011 - 2586581 |
| Delman Hospital | 011 - 2558800 |
| Durdans Hospital | 011 - 2575205 |

### GOVERNMENT HOSPITALS & NURSING HOMES

| | |
|---|---|
| National Hospital Colombo | 011- 2691111 |
| Lady Ridgeway Hospital for Children | 011 - 2693711 |
| De Soysa Maternity Hospital for Women | 011 - 2696224 |
| Castle Street Hospital for Women | 011 - 2696231 |
| Eye Hospital Colombo | 011 - 2693911 |
| Dental Hospital | 011 - 2693106 |
| Jayawardenapura Hospital | 011 - 2778610 |
| Colombo South Hospital - | 011 - 2763063 |

### BANKS

| | |
|---|---|
| Bank of Ceylon Head Office | 011 - 2446790 |
| Ceylinco Development Bank Ltd Head Office | 011 - 7388388 |
| Ceylinco Savings Banks Head Office | 011 - 2374000 |
| Commercial Bank of Ceylon Ltd. Head Office | 011 - 2430420 |
| Hatton National Bank Head Office | 011 - 2664664 |
| National Savings Bank Head Office | 011 - 2573008 |
| Nation Trust Bank Plc Head Office | 011 -4711411 |
| HSBC - Head Office | 011 -2325435 |
| People's Bank Head Office | 011 - 2327841 |
| NDB Bank - Head Office | 011 - 2448448 |
| Sampath Bank - Head Office | 011 - 2358358 |
| Sanasa Bank Ltd-Head Office | 011 - 2575767 |
| StandardChartered Bank Head Office | 011 - 2480000 |
| Vardana Bank Head Office | 011 - 2371371 |
| Deutsche Bank | 011 - 2447062 |

| | |
|---|---|
| Litro Gas | 011-2554648 |
| | 011-2367373 |
| Hotline | 0773683070 |

# IMPORTANT NUMBERS


global express
we strive for your success!

48/3B,1/1,Dharmarama Road,
Colombo-06. Sri Lanka.
T.P : 0112 556 777



global express
we strive for your success!

48/3B,1/1,Dharmarama Road,
Colombo-06. Sri Lanka.
T.P : 0112 556 777



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





05-05-2011 அன்று வறுமையில் வாழும் ஒரு இஸ்லாமியக் குடும்பம் ஒன்றின் திருமணத்திற்காக ஒரு உதவித் தொகையை Span,Spice,Vetti Fm குழும நிறுவனங்களின் நிருவாக இயக்குனர் Lion.திரு.S.குகவரதன் MJF.(JP) அவர்கள் Spice global நிறுவனக்காரியாலயத்தில் வைத்து வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.



global express

*we strive for your success!*




கடந்த சித்திரை மாத எமது Global express மாதாந்த சஞ்சிகையின் LBN விளம்பரப்பக்கத்தில் கேட்கப்பட்ட வினாவிற்குப் பதில் எழுதியனுப்பிய 356 வாசகர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு அழகிய வர்ணப்புடவையைப் பரிசாகப் பெற்ற வெற்றியாளர்

## திருமதி.ஜுட் புஸ்பாந்தன்

(186/17E, பெயின்டர் Street,எழுதூர் மன்னார்)

**மேலும் எங்களால் தொடுக்கப்படும் வினாக்களுக்கு சரியான பதிலை எழுதியனுப்பி பரிசுகளை வென்றெடுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா





எத்தனை பெரிய மாஸ் ஹீரோக்களாக இருந்தாலும், ஒரு படத்தில் அதிகபட்சம் இரண்டு வில்லன்கள் இருப்பார்கள். காரணம் ஒரே படத்தில் இரண்டுக்கு மேற்பட்ட வில்லன்கள் இருப்பது போல திரைக்கதை அமைப்பது இந்திய ஸ்டைல் அல்ல.
ஆனால் இந்த இலக்கணத்தை தமிழ் சினிமாவில் உடைத்தவர் பார்த்தீபன். அவர் இயக்கி நடித்த இவன் படத்தில் 12 வில்லன்களை வைத்து கதையை உருவாக்கினார். தற்போது பார்த்தீபனையே மிஞ்சிவிட்டா வேலாயுதம் படத்தின் இயக்குநர் ஜெயம்ராஜா.

வேலாயுதம் படத்தில் மொத்தம் 15 வில்லன்கள் என்கிறார்கள் உதவி இயக்குநர் வட்டாரத்தில். இந்த பதினைந்து பேரில் 13 பேர் தென்னிந்திய வில்லன்கள். இரண்டுபேர் பாலிவுட் வில்லன்கள். இந்த பதினைந்து வில்லன்களையும், ஒரு சாதாரண பால்காரப் பையனாக,பசு, எருமை மாடுகளோடு சுற்றிக்கொண்டிருக்கும் விஜய் ஏன் வேட்டையாடுகிறார் என்பதுதான் கதை.

இவர்களை வேட்டையாட விஜய் ஏற்கும் சூப்பர்மேன் கெட்-அப் பேசப்படும் என்கிறார்கள். அதேபோல அண்ணன், தங்கை பாசத்தை மையமாக வைத்து உருவாகும் இந்தப் படத்தில் ஜெனலியா குறும்பான டிவி நிருபராகவும், ஹன்ஷிகா விஜயின் கிராமத்து முறைப்பெண்ணாகவும் நடித்திருக்கிறார்களாம். வேலாயுதம் 80% படப்பிடிப்பு முடிந்து விட்டதாம். இன்னும் ஒரு பாடல் காட்சி, ஒரு க்ளைமாக்ஸ் சண்டைக்காட்சி மட்டுமே மீதம் இருக்கிறதாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Kides Korner**

# குழந்தைகளே

எல்லாரும் நல்லா படிச்சு
அப்பா, அம்மா, டீச்சர் கிட்ட நல்ல பெயர் எடுக்கணும்.







## Happy Birthday



Name: Vashanthakumar Nigilesh
Birthday
17-05-2011

Warm Wishes:
Dad Vasu, Suresh, Veni, Vanithakumar, Sanjai, Nihirtha





திரு. திருமதி Kumar Rajany தம்பதிகளின் செல்வப் புதல்வி **Vithushalini** தனது 5வது பிறந்த நாளை 27-05-2011 அன்று No. 8/2 De Fonseka Road இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடினார். அவரை பாசமிகு அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மா, அம்மம்மா, மற்றும் உறவினர்கள் அம்பாளின் அருள்பெற்று, பல்கலையும் கற்று, சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ உளமார வாழ்த்தினார்கள்.

## HELP THE BABY FIND HER RATTLE




## MATCH THE BIRD WITH ITS COLOUR







Green

White

Yellow

Blue

Red







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் எண்ணங்கள் ஈடேற வேண்டுமா?

உங்கள் எண்ணங்கள் ஈடேற வேண்டுமா? உடனே உங்களின் பெயரை அதிர்ஷ்டப் பெயராக அமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எண்ணிய எண்ணங்கள் யாவும் இனிதே ஈடேறும். மனதில் போட்ட திட்டங்கள் அனைத்தும் தங்குதடையின்றி வெற்றி பெறும். உங்களின் எண்ணச் சிதைவுகளுக்கு காரணம் பெயரே ஆகும். பெயரை அதிர்ஷ்டமாகப் பெற்றவர்கள் வாழ்வில் எடுக்கும் எல்லாக் காரியங்களிலும் வெற்றி மேல் வெற்றி பெறுவார்கள். தோல்வியைத் துடைத்தெறியும் சக்தி இவர்களின் பெயரில் இருப்பதால், வெற்றிவாகை சூடிக் கொண்டே இருப்பார்கள். வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் பெயரையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால்தான் இதன் உண்மை ரகசியம் நமக்கு நன்கு தெரியும். வல்லவர்களாக இருந்து வாழ்க்கையில் தோல்வியை அடைந்தவர்களின் பெயரையெல்லாம் ஆய்வு செய்தால் அங்கு தோல்வியின் சுவடுகள் மண்டிக் கிடக்கும். ஒரு மனிதனின் வெற்றிக்கும் தோல்விக்கும் முக்கிய காரணமாக விளங்குவது அவரது பெயரே ஆகும். பெயரின் அதிர்வுகள் மனித மூளையில் இரசாயன மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. இதனால்தான் பெயர் மாற்றத்தின் மூலம் ஒருமனிதன் சாதனையாளனாக, வெற்றியாளனாகத் திகழ முடிகிறது.

# செய்யும் தொழிலே தெய்வம், பணிபுரியும் இடமே கோவில்.

ஆம், ஓவ்வொருவரும் வாழ்வில் தொழில், உத்தியோகப் பணியில் வெற்றிபெற வேண்டுமெனில் செய்கின்ற தொழிலைத் தெய்வமாக மதித்துச் செயற்பட வேண்டும். நாம் எங்கு தொழில் செய்கிறோமோ அல்லது பணி புரிகிறோமோ அவ்விடத்தைக் கோயிலாக மதித்துச் செயற்பட வேண்டும். நம்முடைய எந்தவொரு செயலுக்கும் உடலைவிட மனமே முக்கிய பங்கு வகிக்கிறது. "மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" என்றார் திருமூலர். மனம் எதில் பரிபூரண திருப்தி கொள்கிறதோ அதுதான் அவரவருக்கு வெற்றியாகும். உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதத்தில் வெற்றி கிடைக்கிறது. தோல்விகளை துடைத்தெறிந்துதான் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும். முழுமன ஈடுபாட்டுடன் செய்யும் தொழில் அனைத்தும் வெற்றியைத் தரும். அப்படி வெற்றியைப் பெறவேண்டுமானால் கால நேரத்தைச் சரியாகக் கணக்கிட்டுத் தொழில் செய்ய வேண்டும். உழைப்புடன் கூடிய அதிர்ஷ்டம்தான் வாழ்வில் உண்மையான வெற்றியைத் தரும். சாஸ்திரங்கள் மனிதனுக்கு வழி காட்டுகின்றது. அதற்கு எந்தெந்த திகதியில் பிறந்தவர்கள் எந்தெந்தத் தொழில் செய்து சிறப்படையலாம் என்பதற்கு உங்களுடைய பெயரை அதிர்ஷ்டப் பெயராக மாற்றிக்கொள்ளுங்கள். வெற்றி தானாகவே தேடி வரும்.

## பஞ்ச பூதங்கள்

இவ்வுலகம் பஞ்ச பூதங்களான நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம் ஆகியவற்றால் ஆனது. பஞ்ச பூதங்களாலான இந்த உலகத்தைப் போராலோ, அணு ஆயுதங்களாலோ அழிக்க முடியாது. இவ்வுலகை அழிக்கும் சக்தி மனிதனுக்கு ஒருபோதும் கிடையாது.

### 1 நீர்

அதிக மழை பெய்து, கடல் பொங்கியும், சிறிய அளவு மழை பெய்து குளம், குட்டை, ஆறு நிறைந்தும், பனிமழை பெய்தும் உலக அழிவு ஏற்படும். இதற்கு மாறாக, மழையே பெய்யாமல் பல ஆண்டுகளாக வலட்சி ஏற்பட்டு, புல் பூண்டுகள் தண்ணீர் இல்லாமல் கருகி, மாடு, கன்றுகள், பறவைகள் அனைத்தும் இறந்தும் உலகம் அழியும்.

### 2. நெருப்பு

அக்னி அதிகமாகி காடு மரங்கள் அனைத்தும் எரிந்து பஸ்பமாகி உலகம் அழியும். அக்கினிப் புயல், அக்கினிக் காற்று வீசும். இதற்கு மாறாக சூரிய சக்திகள் கால இயக்கத்தால் உஷ்ணம் அதிகமாகிப் பூமியைத் தாக்கி அழிக்கும். அல்லது சூரியனின் ஒரு பகுதி உடைந்து விழுந்து, பூமியை அக்கினிப் பிழம்பாக்கி அழிக்கும்.

### 3. காற்று

புயற் காற்று சூறாவளியாக மாறி சுழற்றி அடித்து மரம் மட்டைகளை வேரோடு பிடுங்கி அடித்தும், வீடுகளை இடித்தும் ஒன்றோடு ஒன்று மோதச் செய்தும் அழிக்கும். இதற்கு மாறாக இந்த பூமியில் சுவாசிக்க காற்றே இல்லாமல், எல்லா ஜீவன்களும் சுவாசிக்க முடியாது, மூச்சுத் திணறி உலகம் அழியும்.

### 4. நிலம்

நவக் கோளுடன் துணைக் கோளான பூமி தன் சுழற்சியை எதிர்மறையாக்கி பூமி அதிர்ச்சி ஏற்படும். அல்லது பூமி பிளவு ஏற்பட்டு அதனால் எல்லா உயிர்களும் மாண்டு போகும். கடல் பகுதிக்குள் பெரிய மலைகள் தோன்றி கடல்நீர் முழுவதும் பூமிக்குள் வந்து பூமியின் நிலப்பரப்பு முழுவதும் கடலாக மாறிப்போகும். இதற்கு மாறாக பூமியின் சுழற்சி வலப்புறத்திற்கு எதிராக இடப்புறமாகச் சுற்றும். அல்லது மிக அசுர வேகத்தில் சுற்றும். அல்லது தன் நீள் வட்ட பாதையை மாற்றி இயங்கலாம். இயங்காமலும் அப்படியே ஸ்தம்பித்து நின்று கொள்ளலாம். இப்படி நிலத்தின் மூலம் அழியும்.

### 5. ஆகாயம்

உலகம் அகல விரிந்த மிகப்பெரிய அண்டவெளியாகும். இதில் இயங்கும் நவக்கோள்கள் ஒன்பது. துணைக் கோள்கள் ஒன்பது. உபதுணைக் கோள்கள் 9 + 9 + 9 = 27 மொத்தமாகும். இவைகள் ஒன்றோடு ஒன்று தன்னுடைய ஈர்ப்பு விசையை மாற்றி பூமியை நோக்கி வந்து மோதுவதால் பூமியே இருந்த இடம் தெரியாமல் சுக்கு நூறாகிப் போகலாம். இதற்கு தான் கிரக யுத்தம் என்று பெயர். மேற்கூறிய ஐவகை காரணங்களால் மட்டுமே பூமியாகிய நாம் வாழும் உலகம் அழியுமே ஒழிய, மற்றவைகளால் அழிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமிலத்தன்மையை (Acidity) குணப்படுத்தும் எளிய வழிகள்

"அமிலத்தன்மை அல்லது புளிப்புத்தன்மை" (Acidity) எனப்படும் வயிற்றில் ஏற்படும் அமில சுரப்பு பிரச்சினையால் அவதியுறுவோர் ஏராளம்! குறிப்பாக காரம்/ மசாலா அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளை உண்ட பின்னர் இத்தகையோருக்கு நெஞ்செரிச்சல் போன்றவை ஏற்படுவது அதிகம் இவற்றைத் தடுப்பதற்கும், குணப்படுத்துவதற்குமான எளிய வழிகள் இதோ!

போத்தல்களில் அடைக்கப்பட்ட பானங்கள் மற்றும் "Coffin" பொருட்களை அறவே தவிர்த்துவிட்டு அதற்கு பதிலாக மூலிகைத் தேநீர் அருந்தலாம். மேலும் தினமும் வெது வெதுப்பான வெந்நீர் ஒரு டம்ளர் அருந்தலாம். தினசரி உணவில் வாழைப் பழம், தர்பூசனி, வெள்ளரி போன்றவற்றைக் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேணடும். இளநீர் அருந்தினால் இன்னமும் நல்லது. அது அமில சுரப்பு பிரச்சினையைத் தீர்க்கும். தினமும் ஒரு டம்ளர் பால் அருந்துவதும் நல்லதுதான். இரவு உணவை நீங்கள் தூங்கப் போவதற்கு இரண்டு மூன்று மணிநேரத்திற்கு முன்னதாகவே முடித்து விடுங்கள். ஒவ்வொரு உணவு இடைவெளிக்கு இடையேயும் நீண்ட இடைவெளி விடுவதும் அமில பிரச்சினைக்கு மற்றொரு காரணமாக அமைந்து விடுகிறது. எனவே கொஞ்சம் என்றாலும் அந்த நேரத்தில் உணவை எடுத்துக் கொள்ளுங்கள். வெல்லம், எலுமிச்சை, தயிர், வாழைப்பழம், பாதாம் பருப்பு ஆகியவையும் உடனடியாக பலன் தரக்கூடியதே. அளவுக்கதிகமான புகைப்பிடிப்பதும் மற்றும் மது அருந்துவதும் அமிலத்தன்மைப் (Acidity) பிரச்சினையை அதிகமாக்கி விடும். சுவிங்கம் மெல்லுவதும் நல்லது. அதனால் சுரக்கும் அதிகப்படியான உமிழ்நீர் உணவுக்குழாயில் உள்ள உணவை நகர்த்திச் சென்று நெஞ்செரிச்சல் ஏற்படுவதைத் தடுக்கும். மதிய உணவிற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் எலுமிச்சை நீரில் சர்க்கரை கலந்து குடிப்பதும் பலனளிக்கக் கூடியதே. இவையெல்லாவற்றிற்கும் மேலாக முருங்கைக்காய், பீன்ஸ், பூசனி, முட்டைக்கோஸ், கரட் மற்றும் பெரிய வெங்காயம் போன்றவற்றை அதிகம் எடுத்துக் கொள்வதும் அமிலத்தன்மைப் (Acidity) பிரச்சினையை எட்டிப் பார்க்காமல் செய்து விடும். மேலே குறிப்பிட்டவற்றில் பின்பற்ற எது சாத்தியமோ அதைக் கட்டாயம் பின் பற்றினாலே அமிலத்தன்மை (Acidity) அலறியடித்து ஓடிவிடும். ஆனால் இவ்வமிலத்தன்மை மிகவும் அதிகமாகப் பிரச்சினையைத் தருகிறது என்றால் மருத்துவரிடம் உரிய சிகிச்சையை/ ஆலோசனையைப் பெறுவது சாலச்சிறந்தது.

**By : Health Line Clinic**
**No:40, 33rd Lane, Colombo-06. T.P : 011-2361333**

## குபேரனின் குதூகலம்



தேவர்களுக்குள் தேவராய் விளங்குகின்றவர்களில் ஒருவர் குபேரன். ஏனெனில் சகல ஐஸ்வர்யங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளவர். வாழ்ந்தால் குபேரனாய் வாழவேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். குபேர வாழ்வு வாழ கொடுத்து வைக்கவேண்டும் என்றும் சொல்லுவார்கள். குபேரன் வீட்டிலிருந்தால் குதூகலமும் சேர்ந்தே வரும் ஏனெனில் ஐஸ்வர்யங்கள் அனைத்தும் குபேரனிடமிருந்தே கிடைக்கப்பெறுகின்றன. குபேரனின் விதவிதமான பொம்மைகளைப் பார்த்துக் குழந்தைகள் குலுங்க குலுங்க சிரிப்பார்கள். அவர்களின் சிரிப்பில் நாம் எவ்வளவு சந்தோசம் அடைகின்றோம். அதைப்போன்றுதான் நம் வீட்டில் இருக்கின்ற குபேரப் பொம்மைகளினால் நன்மை கிடைக்கும் என்ற முழு நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது. அதனால்தான் இன்று எல்லா வீடுகளிலும், வியாபார நிலையங்களிலும் கலகலப்பான சிரிப்புடன் கூடிய குபேரனின் அழகிய பொம்மைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்கள் கூட கடைகளில் குபேரனின் விதவிதமான பொம்மைகளைப் பார்க்கும் போது அவர்களை அறியாமலேயே ஒரு சிரிப்பு உண்டாகும். அத்துடன் அதை வாங்குவதற்கு மனம் அலைபாயும். மனம் அலைபாய்ந்தாலும் அதை பணம் கொடுத்து வாங்குவதற்கு ஒரு தயக்கம் மனதில் ஏற்படும். ஏனெனில் ஒரு குபேரனின் உருவப் பொம்மை நம் வீட்டிலும் இருந்தால் செல்வம் பெருகுவதற்கு வழியுண்டு அதை எப்படி கிடைக்கப் பெறச்செய்வது, பரிசாக கிடைத்தால் இன்னும் அதிகமான நன்மை ஏற்படுமே என்ற எண்ணம் தோன்றும். அதற்கும் ஒரு வழியை கண்டு பிடித்தார்கள். அதுதான் திருமண வைபவங்களில் வைத்து பரிசாக வழங்குவது.

நாம் ஒரு திருமண வைபவத்திற்குச் சென்று அதில் கலந்து சிறப்பித்து திரும்பும் பொழுது திருமண வீட்டார் வாசலில் வைத்து ஒரு அழகான சுருக்கு பைகளிலோ அல்லது அச்சடிக்கப்பட்ட பைகளிலோ தாம்பூலமாகத் தருவார்கள். அதில் இப்பொழுது குபேரப் பொம்மைகளை வைத்து பரிசளிப்பது பெருகிவருகிறது. இந்த அன்பளிப்பு பணம் கொடுத்து குபேரனை வாங்கத் தயங்குபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

**VISGHA** NO.166,Sea Street,Colombo-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் துரதிர்ஷ்ட பிரபலங்கள்

அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட் விளையாட்டைப் பற்றிப் பேசும் போது கிரெக் செப்பல் என்ற நாமத்தைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. அந்நாட்டில் உருவான மிகத் திறமையான துடுப்பாட்ட வீரரும் தலைமைப் பொறுப்பை வகித்தவருமான கிரெக் செப்பல், 1975ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டித் தொடரில் தனது சகோதரன் இயன் செப்பலின் தலைமையின் கீழ் பங்குபற்றினார். கிரெக் செப்பல் விளையாடிய காலப் பகுதியில் நடைபெற்ற 1979ம் ஆண்டு மற்றும் 1983ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் அவரால் பங்குபற்ற முடியாமல் போனது துரதிர்ஷ்டமே.

1975 உலகக் கிண்ண போட்டித் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிராக 45 ஓட்டங்களையும் இலங்கைக்கு எதிராக 50 ஓட்டங்களையும் எடுத்த இவருக்கு 1979 மற்றும் 1983 உலகக் கிண்ணப் போட்டித் தொடர்களில் தலைமைப் பொறுப்பை வகிக்க சந்தர்ப்பம் இருந்த போதிலும், துரதிர்ஷ்டவசமாக அந்த சந்தர்ப்பம் அவருக்கு கிடைக்கவில்லை.

இவர் எழுபதுகளின் இறுதிக் காலப் பகுதியில் அவுஸ்திரேலிய அணியின் தலைமைப் பதவியை வகித்தாலும், துரதிர்ஷ்டவசமாக சில காரணங்களால் 1979ம் ஆண்டு உலகக்கிண்ண அணியில் இவருக்கு இடம் வழங்கப்படவில்லை. பின்பு மீண்டும் அவுஸ்திரேலிய அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட இவர், 1983ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக தயாராக இருந்த நிலையில், போட்டித் தொடர் ஆரம்பமாவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் இவருடைய சேவையை அவுஸ்திரேலியா அணி இழந்தது. எனவே, கிரெக் செப்பலுக்கு ஒரே ஒரு உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் மட்டுமே (1975) பங்குபற்ற முடிந்தது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலாவதாக பத்தாயிரம் (10,000) ஓட்டங்களைக் கடந்த இந்திய அணியின் பிரபல துடுப்பாட்ட வீரர் சுனில் கவாஸ்கர் நான்கு உலகக் கிண்ண போட்டித் தொடர்களில் பங்குபற்றியவராவார். 1975, 1979, 1983 மற்றும் 1987 ஆகிய போட்டித் தொடர்களில் இவர் பங்குபற்றினார். இந்த நான்கு போட்டித் தொடர்களிலும் இவர் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கியமை அதிர்ஷ்டமே. ஆனால் முதல் மூன்று போட்டித் தொடர்களிலும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக இந்திய அணிக்கு இவருடைய சேவை சரியாகக் கிடைத்ததா என்பது கேள்விக்குறியே. 1975ம் ஆண்டு முதலாவது உலகக் கிண்ண போட்டித் தொடரின் ஒரு போட்டியில், இங்கிலாந்து அணி இந்திய அணிக்கு எதிராக பெற்றுக் கொண்ட 334 ஓட்டங்களை விரட்டிச் செல்வதற்குப் பதிலாக, இவர் தன்னுடைய விக்கெட்டைக் காப்பாற்றிக் கொண்டு 60 ஓவர்கள் முடியும் வரை ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டார். இப்போட்டித் தொடரின் மூன்று போட்டிகளில் பங்குபற்றிய இவர் அரைச்சதம் ஒன்றை டெஸ்ட் அந்தஸ்து பெற்றிராத கிழக்கு ஆபிரிக்காவுக்கு எதிராக பெற்றுக் கொண்டார். 1979ம் ஆண்டு போட்டித் தொடரிலும் சுனில் கவாஸ்கரின் நிலைமை அவ்வாறே அமைந்தது.

இத்தொடரிலும் இவர் பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி ஒரேயொரு அரைச் சதத்தை நியூசிலாந்துக்கு எதிராக பெற்றுக் கொண்டார். 1983ம் ஆண்டு போட்டித் தொடரில் இவரது நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. அத்தொடரிலும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய இவரால் ஒரு அரைச் சதத்தையேனும் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது.

தனது வழமையான துடுப்பாட்ட திறமையை வெளிக்கொண்டுவர சுனில் கவஸ்காருக்கு 1987 உலகக் கிண்ணப் போட்டித் தொடர் வரை பொறுமை காக்க நேரிட்டது. இவர் இப்போட்டித் தொடரில் ஏழு போட்டிகளில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி இரண்டு அரைச் சதங்களையும் ஒரு சதத்தையும் இந்திய அணிக்காக பெற்றுக் கொடுத்தார்.

ஆனால் சுனில் கவாஸ்கருக்கு தான் பங்குபற்றிய நான்கு உலகக் கிண்ணப் போட்டித் தொடர்களில் ஒன்றிலாவது தலைமை தாங்க சந்தர்ப்பம் வழங்கப்படாமை அவரது துரதிர்ஷ்டமே. 1983ம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாக ஐந்து மாதங்களுக்கு முன்பு அவர் தலைமைப் பதவியை வகித்த போதும், 1982 - 83 வருட ஆரம்பத்தில் பாகிஸ்தானுடன் நடைபெற்ற போட்டித் தொடரில் இந்திய அணி தோல்வி கண்டமையால் இவரது தலைமைப் பதவி பறிபோனது.

ஒரு விளையாட்டு வீரர் தான் பங்குபற்றிய உலகக்கிண்ணத் தொடர்களில் மூன்று தொடர்களுக்கு தலைமைப் பதவி வகிக்க கிடைத்தால், அது ஒரு பெரும் அதிர்ஷ்டமே. 1987 முதல் 1999 வரை நடைபெற்ற நான்கு உலகக்கிண்ண தொடர்களில் மூன்று தொடர்களுக்குத் தலைமை வகிக்கும் பாக்கியத்தை மொஹமட் அசாருதீன் பெற்றுக் கொண்டார்.

எனினும், ஒரு உலகக் கிண்ணத்தையேனும் தனது நாட்டுக்கு பெற்றுக் கொடுக்க அவரால் முடியாமல் போனமை அவரது துரதிர்ஷ்டமாகும். 1996ம் ஆண்டு போட்டித் தொடர் அவரால் வெற்றியைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தது. காரணம் இத்தொடர் ஆசியாவில் நடைபெற்றமையாகும். அநேகமானோர் இத்தொடர் ஆரம்பத்திலேயே இந்திய அணியே கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ளும் எனக் கருதினர். ஆனால், இறுதிச் சுற்றுப் போட்டியில் அதிகளவான ரசிகர்களின் மத்தியில், இந்தியாவின் கல்கத்தா நகரில் ஈடன் கார்டன் மைதானத்தில் இலங்கை அணியால் தோற்கடிக்கப்பட்டு இந்திய அணி தொடரிலிருந்து வெளியேறியது.

1984 - 85 காலப் பகுதியிலிருந்து 1993 - 94 காலப் பகுதி வரை அவுஸ்திரேலிய அணியை வழிநடத்திய அலன் போடர் தோல்விப் பாதையில் சென்று கொண்டிருந்த அவ்வணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற சிறந்த தலைவராவார். இவர் 1987 இல்ஆசியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டித் தொடரை வெற்றி பெறச் செய்து உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணிக்கு பெற்றுத் தந்தமை அதிர்ஷ்டமே. அலன் போடர் அக்கால கட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சிறந்த தலைவராக, அதி சிறந்த துடுப்பாட்ட வீரராக கருதப்பட்டாலும், உலகக் கிண்ணப் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் இவர் துரதிர்ஷ்டசாலியாகவே காணப்படுகிறார்.

இவர் பங்குபற்றிய நான்கு உலகக் கிண்ண தொடர்களில் துடுப்பாட்ட வீரராக ஒரே ஒரு அரைச் சதத்தையே இவரால் பெற முடிந்தது. அதுவும் அவுஸ்திரேலிய அணி சாம்பியன் ஆகிய 1987ம் ஆண்டு உலகக் கிண்ண தொடரில், டெஸ்ட் அந்தஸ்து பெற்றிராத சிம்பாப்வே அணிக்கு எதிராகவே பெறப்பட்டது. இன்னும் சொல்லப் போனால், சிறந்த துடுப்பாட்ட வீரராக கருதப்பட்ட அலன் போடரால் 1979 முதல் 1992 வரை நடைபெற்ற எந்த ஒரு உலகக்கிண்ண தொடரிலும் ஒரு சதத்தையேனும் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது இவரது துரதிர்ஷ்டமே.

source:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரும்பிப் பார்க்கின்றோம்...

ஏப்ரல் மாதம் 29ம் திகதி நடைபெற்ற முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு தேவஸ்தானத்தின் இரதோற்சவம் பவனி அன்று எடுத்த புகைப்படங்கள் சில...







Vettri FM

மே மாதம் 8ம் திகதி அன்னையர் தினத்தை முன்னிட்டு வெள்ளவத்தை ஹாமர்ஸ் அவனியூவில் அமைந்திருக்கும் அன்னையர் இல்லத்தில், அன்னையரை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதன்போது வெற்றி எப். எம். இன் நிருவாக இயக்குனர்கள் Lion S. குகவரதன் MJF, J.P., திரு. வி. ஜனகன், திரு. லோஷன் மற்றும் வெற்றி எப். எம் குழுவினரும் கலந்து சிறப்பித்தனர்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த மாதம் 8ம் திகதி வெற்றி எவ் எம் இன் புதிய திட்டமானப் "எம்மால் முடியும்" திட்ட அங்குரார்ப்பண வைபவத்தின் போது வெள்ளவத்தை மயூராபதியம்மன் தொடர்மாடி மனைகளில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான மீள்நிர்மாணப் பணிக்கான நிவாரணப் பொருட்கள் வெற்றி எவ் எம் இன் நிர்வாக இயக்குனர்கள் அரிமா திரு.ச.குகவரதன் மற்றும் திரு.வி.ஜனகன் அவர்களினால் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்



## முன்றாவது இதழின் முதற்பிரதி வெளியீடு

எமது Global Express ன் மூன்றாவது இதழின் முதற்பிரதி 25-04-2011 அன்று கொழும்பு 11, செட்டியார் தெருவில் அமைந்திருக்கும் சரீட்டா நகை மாளிகையின் அதிபர் திரு.இ.பாலசுப்பிரமணியம்




அவர்களுக்கு எமது நிறுவன விற்பனைத்துறை ஒருங்கமைப்பாளர் திரு.ரஜீவ்காந்த் அவர்களினால் நகைமாளிகையில் வைத்துக் கையளிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

# வாசகர் கருத்து

**வாழ்த்துகின்றோம் வாழி!**

தலைப்பிலும் புதுமை! அமைப்பிலும் புதுமை!
சொல்லுந் திறத்திலும் புதுமை!
அனைவருக்கும் சேர்ந்திடும் வகையிலும்
புதுமைப்புத் தாக்கங்கள் மேலும் மெருகூட்ட -
மலர்ந்துள்ள புத்தாண்டில் புதுப்பொலிவுடன்
"குளோபல் எக்ஸ்பிரஸ்" பயணிக்க
வாழ்த்துகின்றோம்! வாழி!

இருமொழித் துணைக்கொண்டு அருமையான
தலைப்புகளின் கீழ்
கருத்தமைப்புச் சிதறா வண்ணம் ஆன்மீக நெறி
காட்டி,
புது அறிவூட்டி, தெளிவூட்டி நகைப்பூட்டி,
நல்வாழ்விற்கு வழிகாட்டி, நாவிற்குச்
சுவையூட்டிகண்ணியம் காத்து,
அடுத்தடுத்து நீ அளித்திடும் அனைத்தும்
ஆழ அகலம் கொண்டவை!
அறிந்தவர்க்கு அவை விருந்தானவை - முன்பு
அறியாதவாக்கு அவை மருந்தானவை.

பயனுறு ஆன்மீக நெறி காட்டுவதிலும்
தெரியுது உன் சமத்துவம்,
பக்கச் சார்பில்லாத நெறி காட்டி நிற்பது உன்
மாசில்லா மகத்துவம்,
வையத்து வாழ்வாங்கு வாழச் செய்வது உன்
இணையற்ற தத்துவம் வகையறியாது
திகைப்போர்க்கும் - திசை
திருப்ப நினைப்போர்க்கும் நீ ஓர் விசித்திரம்!
வான் ஓங்கு புகழ் கொண்டு என்றும்
விளங்கட்டும் உன் சரித்திரம்

ஆக்கம்
திருமதி. மனோகரி ஜெகதீஸ்வரன்
இல.18V, சுபோதராமா வீதி, தெகிவளை.
ஆசிரியை தெகிவளை த.ம.வி

இப்படி ஒரு தரமான புத்தகத்தை லண்டனில் மட்டுமல்ல வேறெங்கும் பார்த்ததில்லை. உங்களின் இந்த சஞ்சிகை இன்னும் பல சிறப்பம்சங்களுடன் வெளிவந்து வெற்றி பெற எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள்.

அரவிந்தன்
விம்பிள்டன், லண்டன்

தமிழ் கூறும் நல்லுலகுக்கு புதிய அம்சங்களுடனும் இலவசமாகவும் வெளியிட்டுள்ள Global Express ற்கு எனது வாழ்த்துக்கள். உங்கள் அடுத்த இதழ் இன்னும் பல சிறப்பம்சங்ளுடனும் சிறப்புடனும் வெளிவரும் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு

திரு. ரவிச்சந்திரன்
கல்முனை

தலைநகரில் தரமான சஞ்சிகையாக வெளிவரும் இக் குளோபல் ஏக்ஸ்பிரஸ் எனும் தமிழ்ச்சஞ்சிகை மேலும் சிறப்புடன் வளர எனது வாழ்த்துக்கள்

திரு. வி.எம்.எஸ்.உதயச்சந்திரன்
கல்வி ஆலோசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா வின் வாழ்க்கை வரலாறு

உலகிலுள்ள பலகோடி பக்தர்களால் அன்புடன் அழைக்கப்படும் ஒரு வாழும் தெய்வமாகக் கருதப்படும் பகவான் சத்ய சாய் பாபா அவர்கள். 1926ம் ஆண்டு நவம்பர் 23ம் திகதி பிறந்தார். இவரது இயற்பெயர் சத்ய நாராயன ராஜூ ஆகும். இவரின் தாயார் ஈஸ்வரம்மாள். தந்தையார் ராஜூ ரட்னகரம் ஆகும். பகவான் சத்திய சாயி பாபா அவர்கள் இளமைக் காலத்தில் இருந்தே ஒரு அதிசயக் குழந்தையாகத் திகழ்ந்ததாக அவரது தாயார் தெரிவித் திருந்தார்.பாபா அவர்கள் 14 வயதாக இருக்கும்போது (1944) மார்ச் மாதம் 8ம் திகதி ஒரு சம்பவம் நடந்ததாக பதிவாகியுள்ளது. கொடிய விஷமுடைய கொடுக்கன் அவரைத் தீண்டியுள்ளது. பல மணிநேரமாக அவர் நினைவிழந்து இருந்திருக்கிறார். இனி மீண்டும் எழ மாட்டார் என நாட்டுப்புற வைத்தியர்கள் தெரிவித்த வேளை, அவர் சில மணிநேரங்களில் எழுந்து பேச ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் எழுந்து பேச ஆரம்பித்த பாஷையைப் புரிந்துகொள்ள முடியாத மக்கள், தேள் கடித்ததால் அவருக்கு புத்தி பேதலித்ததாக நம்பினர். ஆனால் அவர் பேசிய பாஷை சமஸ்கிருதம் என்று பின்னர் அறியப்பட்டது. அவர் சமஸ்கிருதத்தை முன்னர் கற்றது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அப்படி இருக்கும்போது அதை அவர் எவ்வாறு பேசினார் என மக்கள் வியப்பில் ஆழ்ந்தனர். இந்த நிலையில் 1940-ம் ஆண்டு மே 23-ந் தேதி சாய்பாபா வீட்டில் இருந்த அனைவரையும் அழைத்தார். திடீரென தனது கையில் இருந்து கற்கண்டை வரவழைத்து அவர்களுக்கு கொடுத்தார். அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். ஆனால் தந்தை ராஜு/ ரத்னகரம் கோபம் அடைந்து ?ஏன் இப்படி மாய மந்திர வேலை செய்கிறாய்? என்று கூறி திட்டினார். அதற்கு சாய்பாபா நான் யார் தெரியுமா ? சீரடி சாய்பாபாவின் மறு பிறவி என்று கூறினார். அதன் மூலமே அவரை முதல் முதல் ஒரு தெய்வப்பிறவி என மக்கள் நம்ப ஆரம்பித்தனர்.சீரடி என்னும் இடத்தில் 1838ம் ஆண்டு பிறந்தவர் சீரடி பாபா ஆவார். இவர் பல அற்புதங்களை நிகழ்த்தி மக்கள் குறைகளை நீக்கினார். சீரடியில் பல கோயில்கள் மடங்களை உருவாக்கிய சீரடி பாபா அவர்களை பல லச்சக்கணக்கான மக்கள் போற்றி வணங்கினர். மக்களின் குறை களைத் தீர்த்த அவர், தீராத வியாதிகளையும், மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளையும் குணமாக்கினார். அவர் 1918ம் ஆண்டு தனது 80 வது வயதில் இறைபதம் எய்தினார். அதற்கு முன்னர் தாம் இறைபதம் எய்யவிருக்கும் நாளை அவர் மக்களுக்குச் சொன்னதோடு, இன்னுமோர் விடையத்தையும் தெரிவித்தார். அது தான் மறு பிறவியாகும். இந்துக்களால் நம்பப்படும் ஒரு விடயம் மறு பிறவியாகும்.1918ம் ஆண்டு அவர் இறக்க முன் தான் மீண்டும் பிறந்து வருவேன் என்றும் அதிசயங்களை நிகழ்த்துவேன் என்றும் தெரிவித்திருந்தார். அதன் பின்னரே சத்திய சாகி பாபா அவர்கள் அவதரித்தார். புட்டபத்தி சென்ற அவர் 40துகளில் பல அற்புதங்களைப் புரிந்து சீரடி பாபாவின் மறு அவதாரம் தானே என மக்களுக்கு கூறினார். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா என உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் அவருக்கு பக்தர்கள் பெருகினார். வெளிநாட்டவரும் வேற்றின மக்களும் அவரை நாடி, நன்மைகளைப் பெற்றனர். பிள்ளையில்லாத பலர் பிள்ளை வரங்களையும், தீராத நோயால் பீடிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து விடுதலையும், கண் பார்வை இழந்தோர் கண் பார்வையும் திரும்பப் பெற்றனர் எனச் சொல்லப்படுகிறது.பல அற்புதங்களை நிகழ்த்தி, தெய்வீகக் குணம் கொண்ட பாபா மேல் சில விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டது என்பதனை யாரும் மறுத்துவிட முடியாது. அவர் நிகழ்த்தும் அதிசயங்கள் சித்து விளையாட்டு அல்லது கண்கட்டு வித்தை என்று சிலரால் விமர்சிக்கப்படுகிறது. அவர் பாலியல்ரீதியாக தம்மை துண்புறுத்தியதாகவும் சிலர் புகார் கூறியுள்ளனர். அதனை பி.பி.சி போன்ற சர்வதேச தொலைக்காட்சியும் ஒளிபரப்பி இருந்தது. அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எதுவும் இதுவரை நிரூபனமாகவில்லை என்பது அனைவரும் அறிந்த விடையம். மனிதன் எவ்வாறு கடவுள் ஆகலாம், ஒரு மனிதனை எவ்வாறு கடவுள் என நாம் கும்பிட முடியும் என பல பகுத்தறிவு வாதிகளும் நாத்திகர்களும் பாபாவை விமர்சிப்பது உண்டு. ஆனால் ஒரு மனிதனை நாம் ஏன் வணங்குகிறோம் என்று எழும் கேள்விகளுக்கு கீழே பதில்கள் உள்ளது.குறிப்பாக சத்ய சாய் பாபா அவர்களுக்கு, வெளிநாட்டு பக்தர்கள் அதிகரித்ததால் அவர்கள் நன்கொடையாகக் கொடுக்கும் பணம் கோடிக்கணக்கில் சேர ஆரம்பித்தது. புட்டபத்தி என்னும் மிகவும் பின் தங்கிய கிராமத்தை அப் பணம் கொண்டு அவர் நவீன நகரமாக மாறினார். மலைகள் சூழ அடிவாரத்தில் இருந்த அக் குக்கிராமத்தை ஒரு நகரமாக்கிய பெருமை அவரையே சாரும். விமானநிலையம், மருத்துவக் கல்லூரி, இலவசப் படிப்பு, பாடசாலை, பல்கலைக்கழகம், இலவச மருத்துவமனை, இலவச இருதய அறுவை சிகிச்சை, என பல திட்டங்களை நிறைவேற்றினார் பாபா. பாபா இருதய அறுவை சிகிச்சை மருத்துவமனை, இதுவரை பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. அதுமட்டுமா, குடிக்கும் நீர் என்றால் அது ஒரு கனவு என்று நினைத்திருந்த கிராம மக்களுக்கு நீர் வசதி செய்துகொடுத்துள்ளார். ஆந்திரா அரசாங்கமே செய்ய பின்னடித்த காரியம் ஒன்றை எந்த எதிர்ப்பு வந்தாலும் பரவாயில்லை என அவரே முன் நின்று செய்து முடித்தார். பல கோடி ரூபாசெலவில், சுமார் 3500 கி.மீட்டர் நீளமான குழாய்களை அமைத்து, அதனூடாக நீரை எடுத்துவந்து வரண்ட பல கிராமங்களைச் செழிப்புறச் செய்தார். விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாத மக்கள், நீர் கிடைத்ததால் விவசாயம் செய்தனர். தமது வாழ்வாதாரத்தை வளப்படுத்தினர். சுமார் 5 லட்சம் மக்கள் பல குக்கிராமங்களில் இன்று விவசாயம் செய்வது பாபாவின் நீர்பாசனத் திட்டத்தினால் என்பது யாவரும் அறிந்ததே. இத் திட்டம் தொடர்பாக பல சர்வதேச தொலைக்காட்சிகள், பாபாவை புகழ்ந்து பாராட்டியது. வாயில் இருந்து லிங்கத்தை எடுப்பது, மண்ணை குங்குமமாக்குவது, என பல அதிசயங்களை அவர் செய்துகாட்டியதும், அதனை சில மனிதர்கள் ஏற்றுக்கொள்ளாமல் விமர்சிப்பதும் ஒரு பக்கம் இருக்கிறது. நாம் அதனை ஒரு பக்கமாகவே விட்டுவிடுவோம். லட்சக்கணக்கான மக்கள் உயிர்வாழ லட்சக்கணக்கான மக்களுக்கு அவர்கள் நினைத்துப்பார்க்க முடியாத சத்திர சிகிச்சைகளை இலவசமாகச் செய்த, லட்சக்கணக்காம மாணவர்களுக்கு இலவசக் கல்வி கொடுத்து, லட்சக்கணக்காம மக்களுக்கு குடிக்கவும், விவசாயத்துக்கும் தண்ணீர் கொடுத்து அவர்கள் வாழ்வாதாரங்களை உயர்த்தி அவர்களை வாழவைத்த ஒரு நல்ல மனிதராகவே நான் பகவான் சத்ய சாய் பாபா அவர்களைப் பார்க்கிறேன் என்றால் மிகையாகாது.பாபா புரிந்த அற்புதங்களை எவர் வேண்டும் என்றாலும், விமர்சிக்கலாம். ஆனால் அவர் புரிந்துள்ள மனிதநேயத் தொண்டையே இல்லை மனிதநேய உதவிகளையே எவராலும் மறுக்கவோ இல்லை விமர்சிக்கவோ முடியாது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்றான் கவிஞன். அதனையே பாபா செய்திருக்கிறார் எனலாம். தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினை அழிப்போம் என்றான் புரட்சிக்கவி பாரதி . பாபா மக்களுக்கு உணவை வழங்கியதோடு நின்று விடாது, விவசாயத்தைச் செய்ய உதவியுள்ளார். லட்சக் கணக்கான மக்களுக்கு உதவி, வறுமையில் இருந்து எவன் ஒருவன் உயிர் காக்கிறானோ அவனே கடவுள் ! அப்படி என்றால் பாகவான் சத்ய சாய் பாபாவும் ஒரு கடவுள் தான் ! அவர் மீண்டும் புண்ணிய பூமியில் பிறப்பார் என இந்துக்கள் நம்பியுள்ளனர். அதுவும் விரைவில் நடந்தேறும் சீரடி பாபா, பின்னர் சத்ய சாய் பாபா போல மறுபடியும் பாபா பிறப்பார் இதுவே இந்துக்களின் நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org